ஐந்தருவி

முதல்வர் கலைஞர்


ஐந்தருவி

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர்
ஆய்வக நூல்
நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவாலயம்

முதல்வர் கலைஞர்

தலைமைக் கழக வெளியீடு:
திராவிட முன்னேற்றக் கழகம்
"அண்ணா அறிவாலயம்"
367 & 369, அண்ணா சாலை,
சென்னை – 600 018.

முதற் பதிப்பு: பிப்ரவரி 2007.



29108

விலை: ரூ. 5/-

அச்சிட்டோர்: மாருதி பிரஸ்,
174, பீட்டர்ஸ் சாலை,
சென்னை - 600 014.

இந்நூல்....

முதல்வர் கலைஞர் அவர்கள், 2007 ஜனவரி, பிப்ரவரி ஆகிய மாதங்களில் சென்னை மக்கள் அமைப்பின் சார்பில் சத்ய சாய்பாபா அவர்களுக்கு நடைபெற்ற நன்றி – பாராட்டு விழாவிற்கு தலைமையேற்றும், நாகப்பட்டினத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாதா அமிர்தானந்த மயி மடம் சார்பில் கட்டப்பட்டுள்ள வீடுகளை பயனாளிகளுக்கு வழங்கியும், செஞ்சி இராமச்சந்திரன் இல்ல மணவிழா வரவேற்பில் வாழ்த்துரை வழங்கியும், திருச்சி ரெத்தினவேல் தேவர் சிலையினை திறந்து வைத்தும், மதுரை தியாகராசர் பொறியியல் கல்லூரி பொன்விழாவில் கலந்து கொண்டும் ஆற்றிய உணர்ச்சிகரமான உரைகளைத் தொகுத்து "ஐந்தருவி" எனும் தலைப்பிலே தலைமைக் கழகம் நூல் வடிவிலே பெருமையுடன் வெளியிடுகிறது.

திருச்சி என்.செல்வேந்திரன்
கழக வெளியீட்டுச் செயலாளர்,
தி.மு.க.

ஆய்வக நூல்
நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவாலயம்

சென்னை மக்கள் அமைப்பின் சார்பில் சத்ய சாய்பாபா அவர்களுக்கு நன்றி–பாராட்டு விழாவில் முதல்வர் கலைஞர் ஆற்றிய உரை.

21.1.2007 அன்று சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கில், சென்னை மக்கள் அமைப்பின் சார்பில் சத்ய சாய்பாபா அவர்களுக்கு நன்றி – பாராட்டு விழாவுக்குத் தலைமையேற்று முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை:–

இன்று அருள்மிகு சத்ய சாய்பாபா அவர்களுக்கு தமிழகத்தில் ஒரு நன்றி தெரிவிக்கின்ற விழா நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. பாராட்டுகின்ற விழாவாகவும் சேர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இந்த இரண்டையும் விட முக்கியமாக சிலருக்கு ஒரு எதிர் பார்ப்பு விழாவாகவும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

இங்கே நம்முடைய வேணு சீனிவாசன் அவர்கள் வரவேற்புரையாற்றும்போது அன்புக்கும் பாசத்துக்கும் உரிய அருள்மிகு சத்ய சாய்பாபா அவர்கள் ஆற்றி வருகின்ற அரும்பணிகளைப் பற்றியெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் ஆற்றுகின்ற பணி என்ன என்பதை சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், இங்கே ஆங்கிலத்திலே எழுதப் பட்டிருக்கின்ற பொன்மொழிகளிலேயே அது அடங்கியிருக்கின்றது. "Service to Man is Service to God" என்று இங்கே எழுதப்பட்டுள்ளது. (கைதட்டல்) அந்தப் பொன் மொழிக்கு மதிப்பளிக்கின்றவன் என்ற முறையில் நான் இந்த விழாவிலே கலந்து கொண்டிருக்கின்றேன்.

பல பேருக்கு ஆச்சரியமாக இருக்கக் கூடும், என்ன இந்த இரண்டு பேரும் ஒரு விழாவிலே கலந்து கொள்கிறார்கள் என்று! இது ஒன்றும் ஆச்சரியத்திற்குரிய தல்ல. காவேரியும் கொள்ளிடமும் ஒன்றாகப் போகிறதே, அது எப்படி ஆச்சரியத்திற்குரியதில்லையோ, அதற்கு காவேரி என்று பெயர் தனியாக இருக்கலாம், மற்றொன்றுக்கு கொள்ளிடம் என்று பெயர் தனியாக இருக்கலாம், ஆனால் இரண்டிலும் ஒடுவது தண்ணீர் தான், அந்த இரண்டு தண்ணீரும் பாய்வது கழனிக்குத் தான், அந்தக் கழனி யிலே விளைவது கதிர் தான், அந்தக் கதிரிலே கிடைப்பது நெல் தான், அந்த நெல்லுக்குள் இருப்பது அரிசி தான், அந்த அரிசி தான் எல்லோருக்குமே உணவு. அதைப் போலத் தான் காவேரியும், கொள்ளிடமும் போல இங்கே நாங்கள் இருவரும் அமர்ந்திருக்கிறோம் என்பதை நீங்கள் மறந்து விடக் கூடாது. (பலத்த கைதட்டல்)

காவேரியைப் பற்றி நான் இங்கே சொல்லும்போது, நம்முடைய கர்நாடக முதலமைச்சர் மாண்புமிகு குமாரசாமி அவர்கள் பேசியது எனக்கு நினைவுக்கு வந்தது. தென்னகத்தைப் பொறுத்தவரையில் அதை ஒரு தீபகற்பம் என்று சொன்னாலும், தமிழகத்தைப் பொறுத்தவரை தண்ணீர்ப் பிரச்சினையில் ஒரு பக்கத்தில் ஆந்திரா, ஆந்திரா வின் தயவு இல்லாவிட்டால் தமிழகத்திற்கு தண்ணீர் இல்லை. இன்னொரு பக்கம் கர்நாடகா, கர்நாடகாவின் தயவு இல்லா விட்டால் தமிழகத்திற்கு தண்ணீர் இல்லை. இன்னொரு பக்கம் கேரளா, அவர்களின் தயவு இல்லா விட்டால் தமிழகத்திற்கு தண்ணீர் இல்லை. இப்படி நான்கு பக்கமும் வேடர் சூழ்ந்திட நடுவில் சிக்கிய மான் போல, தமிழகத்தை சுற்றிலும் தண்ணீர் உள்ள மாநிலங்கள், ஆனால் தமிழகம்

கண்ணீர் வடிக்கும் மாநிலமாக இன்றைக்கு இருக்கின்றது. (கைதட்டல்) இந்தக் கண்ணீரைத் துடைக்கத் தான் அரசு எடுக்கின்ற முயற்சிகளுக்கு, அருந்துணையாக அருள்மிகு சாய்பாபா அவர்களும் விளங்குகிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பல பேருக்குச் சந்தேகம். பிரச்சாரம் கூடச் செய்வார்கள். இவன் கடவுளை ஏற்றுக்கொள்ளாதவன், இவன் சாய்பாபா வோடு அமர்ந்து இந்தக் கூட்டத்திலே பாராட்டுகிறான் என்று நாளைக்குப் பேசுவார்கள். கடவுளை ஏற்றுக் கொள்வதும், ஏற்றுக் கொள்ளாததும் பற்றி அந்தத் தத்துவத்தை சில பேர் உணராமல் பேசுகிறார்கள். கடவுளை நான் ஏற்றுக் கொள்கிறேனா என்பது பிரச்சினை அல்ல. கடவுள் என்னை ஏற்றுக் கொள்கின்ற அளவிற்கு (கைதட்டல்) நான் நடக் கிறேனா இல்லையா என்பதுதான் பிரச்சினை (பலத்த கைதட்டல்). நான் நடந்து கொண்டால், கடவுள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் நம்மை மக்கள் ஏற்றுக் கொள்வர். கடவுள் நம்மை ஏற்றுக் கொள்கின்ற அளவிற்கு நாம் நடந்து கொள்கிறோமா இல்லையா என்ற கேள்விக்கு நமது செயல்களே பதிலளிக்க வேண்டும்.

இங்கே வேணு சீனிவாசன் பேசும்போது சொன்னார். எத்தனை இலவச உதவிகள்? எத்தனை பேருக்கு சிகிச்சை? எத்தனை பேருக்கு அறுவை சிகிச்சைகள்? இவற்றையெல் லாம் இலவசமாகவே சாய் பாபா அவர்கள் செய்து உயிர் கொடுத்திருக்கிறார்; பல பேருக்கு; எவ்வளவு பேருக்கு சாய்பாபா கல்வி தானம் செய்திருக்கிறார் என்றெல்லாம் சொன்னார். அங்கேயும் இலவசம், இங்கேயும் இலவசம்தான். (பலத்த கைதட்டல்) ஆனால் இங்கே சொல்கிறார்கள், இலவசம்

அதிகமாகக் கொடுத்தால், திவாலாகி விடும் என்று. திவாலாக மாட்டோம், எடுக்க எடுக்க அன்பு குறையாது, அன்பு குறையவில்லை என்றால், ஆஸ்தி யும் குறையாது. அந்த நம்பிக்கையோடு தான் நம்முடைய அருள்மிகு சாய்பாபா அவர்கள் தன்னுடைய பணியை ஆற்றிக் கொண்டிருக்கிறார். அதைத் தான் அவர் "ஆண்டவன் பணி" என்று கருதுகிறார். இதைத் தான் நானும் "ஆளுகிறவன் பணி" என்று கருதிக் கொண்டிருக்கிறேன். (கைதட்டல்)

ஆண்டவன் பணிக்கும், ஆளுகிறவன் பணிக்கும் ஏறத்தாழ இருக்கின்ற ஒற்றுமையில் இல்லாதவர்களுக்கு இலவசமாக வழங்குவதில் தவறில்லை. இல்லாதவர்களுக்கு உதவி செய் வதில் எந்தத் தவறும் இல்லை. எந்தக் குற்றமும் இல்லை. அவர்களுக்குத் தெரியும், இன்று நேற்றல்ல, தம்பி துரைமுருகன் இங்கே எடுத்துக் காட்டியதைப் போல, தயாநிதி மாறன் சொன்னதைப் போல் நேற்று அவரோடு உரையாடிய போதும், நானும் அவரை, அவருக்குத் தெரியாமல் பல ஆண்டு காலமாகக் கவனித்துக் கொண்டிருக்கிறேன், அவரும் என்னை, எனக்குத் தெரியாமல் கவனித்துக்கொண்டிருக் கிறார், பல ஆண்டு காலமாக. அதனால்தான் அவர் கேட்டார், இந்தத் துண்டைப் பார்த்துக் கேட்டார், இந்த மஞ்சள் துண்டை நீங்களும் ஏழெட்டு ஆண்டுகளாக அணிந்திருக் கிறீர்கள், யார் யாரோ என்னென்னவோ சொல்கிறார்கள், அதைப் பற்றிக் கவலைப்படாமல் விடாப்பிடியாக போட்டிருக்கிறீர்கள் என்று சொன்னார்.

நான் அப்போது சொன்னேன், புத்தருடைய அங்கவஸ் திரமே மஞ்சள் துண்டு தான் என்று சொன்னேன், சிரித்துக் கொண்டார். பிறகு அவரிடம் சொன்னேன். என்னை நீங்கள்

தொடர்ந்து பல ஆண்டுகளாகக் கவனித்துக் கொண்டிருக் கிறீர்கள் போலிருக்கிறதே என்றேன். ஆமாம் என்று சொன்னார். நான் ஒன்றைச் சொல்ல விரும்பு கிறேன். நாட்டில் வேடதாரிகள் பலர் உண்டு. அந்த வேடதாரிகளை ஒரு பகுதியாகவும், இப்படிப்பட்ட நல்ல உள்ளம் படைத்த (பலத்த கைதட்டல்) துறவுக் கோலம் பூண்டவர்களை ஒரு பகுதியாகவும் பிரித்துப் பார்க்க நான் தவறியதே இல்லை. மக்களுடைய கஷ்டங்களைப் போக்க வேண்டுமென்று கருதுகின்றவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் துறவிகளை விட மேலானவர்கள். இன்னும் சொல்லப் போனால், ஆண்டவனுக்கே ஒப்பானவர்கள் அவர்கள் என்று சொன்னால், அதை யாரும் மறுக்க முடியாது.

அப்படிப்பட்ட நிலையிலே இன்றைக்கு சென்னை மாநகரின் தேவைகளை, கடந்த காலத்தில் ஏற்பட்ட நிலைமைகளை எண்ணிப் பார்த்து, தன்னால் என்ன செய்ய முடியுமோ அதைச் செய்ய, அவர்கள் முன் வந்து ஏற்கனவே 1983ஆம் ஆண்டு என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களும், என்னுடைய அருமை நண்பர் என்.டி.ஆர். அவர்களும், இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் அடிக்கல் நாட்ட, தொடங்கிய தெலுங்கு கங்கை திட்டம், இடையிலே கிடப்பிலே போடப்பட்டு 1996ஆம் ஆண்டு ஓரளவு நிறை வேறி, பிறகு சிக்கல்களுக்கு, பிரச்சினைகளுக்கு ஆட்பட்டு, கடந்த ஐந்தாண்டுகாலமாக சரிவர இயங்க வில்லை. அதனை சரிவர இயங்க வைத்து, அந்தக் கட்டு மானங்களை யெல்லாம் செம்மைப்படுத்தி, மேம்படுத்தி மேலும் சென்னைக்கு தண்ணீர் தாராளமாகக் கிடைக்க உதவிகளைச் செய்வேன் என்று அவர்கள் வாக்களித்திருக்கிறார்கள். அந்த வாக்கை

எப்படி வகைப்படுத்துவது, நிறை வேற்றுவது என்பதைப் பற்றி யோசித்து அவர் களிடத்திலே விவாதித்து, நல்ல முடிவை அவர்கள் விரைவிலே அறிவிக்கலாம்.

துரைமுருகனும், தயாநிதி மாறனும் பேசும்போது கூவம் பற்றி சொன்னார்கள். அது உங்களுடைய கனவல்லவா என்றார்கள். கனவு தான், ஆனால் அந்தக் கனவு நிறைவேற வில்லை. அது நிறைவேறுவதற்கு உங்களுடைய பங்கும் இருக்கட்டும் என்று சொன்னேன். அதற்கு செலவு துரைமுருகன் சொன்ன ஆயிரம் கோடி ரூபாயை அவரிடம் நான் கேட்கவில்லை. அவர் கொடுத்தால் பெற்றுக் கொள்ள ஆட்சேபணை இல்லை. ஆனால் ஆயிரம் கோடி ரூபாய் ஆகாது. குறைவாகத்தான் ஆகும். அதிலே ஒரு பங்கை அவர்கள் ஏற்றுக் கொண்டு கூவம் நதி எப்படி, உலகத்திலே உள்ள பல்வேறு நாடுகளுடைய தலைநகரங்களில் எல்லாம், அந்தத் தலைநகரத்திற்குள் ஓடுகின்ற ஆறு அந்த நகரங்களையே அழகுபடுத்துகிறதோ, அதைப்போல சென்னையை அழகுபடுத்துகின்ற ஆறாக கூவம் ஆக வேண்டுமென்ற கருத்தை, ஆசையை அவரிடம் கூறி யிருக்கிறேன்.

துறவிகளுக்கு நேராக ஆசை படக் கூடாது. இந்த ஆசை சுயநல ஆசை அல்ல. மக்களுக்காக ஏற்படுகின்ற ஆசை. "ஆகாரத்திற்காக அழுக்கைச் சாப்பிட்டு, தடாகத்து நீரைச் சுத்தப்படுத்துகிறதே மீன்'' என்ற உரையாடலை எழுதியவன் அல்லவா நான், எனவே தான் தடாகம் சுத்தமாக வேண்டும். சென்னை எழில் நிறைந்த நகரமாக வேண்டும். தமிழகத்தின் தலைநகரம் என்கிற சிறப்பு அதற்கு இருக்க

வேண்டும். அந்தச் சிறப்பை ஏற்படுத்தவும், தமிழ்நாட்டு மக்களுடைய ஏழ்மையைப் போக்கவும் இந்த அரசு எடுத்துக் கொள்கின்ற முயற்சிகளுக்கு பாபா போன்றவர்கள் தங்களுடைய பங்களிப்பைச் செய்யத் தயாராக இருக்கும் போது நான் இன்னமும் தைரியமாக பல சாதனைகளை மக்களுக்குச் செய்யத் தயாராக இருக்கிறேன் என்பதை எடுத்துக் கூறி, அந்தத் தைரியத்தை, துணிவை, அந்த நம்பிக்கையை ஏற்படுத்தும் விதமாக இந்த விழா அமைந்திருக்கிறது என்பதை எடுத்துக் கூறி, இந்த விழாவில் உங்கள் அனைவருக்கும் என் வாழ்த்துக்களைக் கூறி என்னுடைய நன்றியை, பாராட்டுகளை அவர்களுக்குத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்.

****

நாகப்பட்டினத்தில், சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாதா அமிர்தானந்தமயி மடம் சார்பில் கட்டப்பட்டுள்ள வீடுகளை வழங்கி முதல்வர் கலைஞர் ஆற்றிய உரை

நாகப்பட்டினத்தில் 31.1.2007 அன்று சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாதா அமிர்தானந்தமயி மடம் சார்பில் கட்டப்பட்டுள்ள வீடுகளை வழங்கி முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு :–

இன்று ஒரு மகிழ்ச்சிகரமான நாள். மகிழ்ச்சி அன்பு காட்டுவதிலும் ஏற்படும். ஆறுதல் கூறுவதிலும் ஏற்படும். அப்படி ஆறுதல் கூறுகின்ற பொறுப்பை ஏற்று; இழப்பவர்களுக்கு ஈடு செய்யக் கூடிய வாய்ப்பை உருவாக்கி அந்த வாய்ப்பே தானாக மாறி அவர்களுக்கு – வாடுகின்றவர்களுக்கு வீடுகளை வழங்க வந்துள்ள அம்மா அவர்களை உங்களோடு சேர்ந்து நானும் வருக – வருக என்று வாழ்த்தி பாராட்டி மகிழ்கின்றேன்.

அம்மா அவர்கள் கேரள மாநிலத்திலே கொல்லம் மாவட்டத்தில் இருக்கும் பரையக்கடவு என்னும் கடலோர மீனவ கிராமத்திலே உதித்தவர்கள். கடலோரத்தில் என்ன உதிக்கும்? பொதுவாக முத்து உதிக்கும். அதனால்தான் முத்தாக அவர்கள் நமக்கெல்லாம் கிடைத்திருக்கிறார்கள். அந்த முத்து, நன்முத்தாக அருள்முத்தாக ஏழைக்கு இரங்குகின்ற முத்தாக, நோய்வாய்ப் பட்டோருக்கெல்லாம் இரக்கம் காட்டுகின்ற முத்தாக, குழந்தைகளை பேணிப் பாதுகாக்கின்ற முத்தாக, குடிசைகளை வாழ்விக்கின்ற முத்தாகத் தன்னை ஆக்கிக் கொண்டு, தொண்டுள்ளதோடு பணியாற்றி வருகிறார்கள்.

இவர் ஆற்றி வருகின்ற பணிகளால் கேரளம், தமிழகம் உள்ளிட்ட இந்திய மாநிலங்களிலும், அயல் நாடுகளிலும் அன்பர்கள் ஆயிரக்கணக்கில் , இலட்சக் கணக்கில் பரவி உள்ளனர். அவர்கள் அளித்து வரும் நன்கொடைகள் மூலமாக மனிதாபிமான உணர்வுகளின் அடிப்படையில் பாராட்டத்தக்க வகையிலே அம்மையார் தொண்டு புரிந்து வருகிறார்கள்.

கேரளாவில் ஆதரவற்ற குழந்தைகள் இல்லம் – முதியோர் இல்லம், உயர்தர இலவச மருத்துவமனை முதலியவற்றை நடத்தி வருகிறார். அமெரிக்காவில் கத்ரினா சூறாவளியால் பாதிக்கப் பட்டவர்களுக்கு உதவிட கிளிண்டன், புஷ் பவுன்டேஷன்களுக்கு ஒரு மில்லியன் டாலர் நிதி வழங்கியுள்ளார்கள் என்பதை கேட்டு நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

குஜராத் பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட கட்ச் மாவட்டத்தில் மூன்று கிராமங்களை பதினைந்து கோடி ரூபாய் செலவில் புதுப்பித்து, வீடுகளும், சமுதாயக் கூடங்களும், பள்ளிகளும் கட்டியுள்ளார்கள். காஷ்மீர் பூகம்ப நிவாரணத்திற்கு 50 இலட்ச ரூபாய் செலவில் உதவிகள் வழங்கியுள்ளார். விதவைப் பெண்களின் முன்னேற்றத்திற்காக கேரளா – தமிழகம் உள்ளிட்ட பல மாநிலங்களிலும் பல உதவிகளை செய்து வருகிறார்கள். ஆண்டுதோறும் ஏழை எளியோர்களுக்கு பத்தாயிரம் வீடுகள் கட்டும் திட்டம் ஒன்றையும் செயல்படுத்த தொடங்கியுள்ளார். மனிதாபிமான உணர்வுகளை சமுதாயத்தில் வளர்ப்பதில் மாதா அவர்கள் ஆற்றிவரும் பணிகள் என்றும் பாராட்டுதற்குரியவை.

தமிழகத்தில் ஏற்பட்ட சுனாமி கொடுமைக்கு வருந்தி நாகப்பட்டினம் உட்பட பல பகுதிகளிலும் 80 கோடி ரூபாய் மதிப்பில் இலவசமாக வீடுகளும் மீன்பிடிப் படகுகள் போன்ற பிற சாதனங்களும் அம்மையார் அவர்களால், வழங்கப்பட்டிருக்கின்றன.

தமிழகத்திலே சுனாமியால் ஏற்பட்ட பாதிப்புகளையும் அந்த பாதிப்புகளுக்கு ஆட்பட்ட மக்களுக்கு ஆறுதல் வழங்க, அரசின் சார்பில் அளிக்கப்பட்ட நிவாரணங்களையும் பல தொண்டு நிறுவனங்களின் சார்பாக அளிக்கப்பட்ட நிவாரணங்களையும் நீங்களெல்லாம் மிக நன்றாக அறிவீர்கள்.

2004ஆம் ஆண்டு 26.12.2004 அன்று சுனாமி பேரலை சீற்றத்தால், தமிழகத்தில் 13 கடலோர மாவட்டங்கள் பாதிக்கப்பட்டன.

238 கிராமங்கள் 418 குடியிருப்புகள் அழிந்தன.

7,995 மனித உயிர்கள் பறிக்கப்பட்டன.

223 குழந்தைகள் பெற்றோர்களை இழந்து ஆதரவற்றவராயினர்.

1495 குழந்தைகள் பெற்றோரில் தாயை அல்லது தந்தையை இழந்தனர்.

846 பேர் காணாமலே போயினர்.

3,504 பேர் பலத்த காயமடைந்துள்ளனர்.

45,892 வீடுகள் முற்றிலும் அழிந்தன.

11 ஆயிரத்து 662 வீடுகள் பெரும்பகுதி சேதமடைந்தன.

ஏறத்தாழ ஐந்து இலட்சம் பேர் குடியிருப்புகளை விட்டு வெளியேறினர்.

10 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் கடுமையான பாதிப்புக்கு ஆளாகினர்.

16 ஆயிரம் கால்நடைகள் அழிந்தன.

42 ஆயிரத்து 178 மீன்பிடிப் படகுகள் முழுவதும் சேதமடைந்தன.

8,900 மீன்பிடிப் படகுகள் ஓரளவு சேதமடைந்தன.

3 இலட்சம் மீனவக் குடும்பங்கள் தொழில் வாய்ப்புகளை இழந்தன. 4,250 கோடி ரூபாய் அளவுக்கு இழப்பு ஏற்பட்டது.

14 சிறு துறைமுகங்கள் மீன் இறங்கு தளங்கள் பாதிக்கப்பட்டன.

சுனாமி தாக்குதலால் சுருண்டு கிடந்த மக்களை அன்றைய அரசு, கடந்த காலத்து அரசு உடனடி உதவிகள் செய்து, அவர்களுக்கு உதவி புரிந்தது. என்றாலும், நிலையான நிரந்தரமான, அமைதியான

வாழக்கூடிய சூழ்நிலையை அவர்கள் உருவாக்கவில்லை. ஒருவேளை அதற்கிடையே தேர்தல் வந்து, அந்தத் தேர்தல் பணிகளிலே ஈடுபட்ட காரணத்தால், அன்றைய அரசு அந்தப் பணிகளைத் தொடர முடியவில்லை. 24.12.2004 சுனாமி பேரலையால் தமிழகம் பெரிதும் பாதித்தது.

சுனாமி நிவாரணப் பணிகளுக்காக மத்திய அரசிடமிருந்து ராஜீவ்காந்தி மறுவாழ்வு திட்டத்தின் கீழ் ரூபாய் 2347 கோடி பன்னாட்டு உதவிகளின் மூலமாக 2,550 கோடி ரூபாயும் ஆக மொத்தம் 4,897கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டது. அப்படிப் பெறப்பட்ட நிதியை தற்காலிக அவசர நிவாரணத்திற்குத்தான் அன்றையஅரசு பயன்படுத்த முடிந்ததே தவிர, நிலையான, நிரந்தரமான காரியங்களுக்கு பயன்படுத்தவில்லை. காரணம், அந்த 4,897 கோடி ரூபாய் அடங்கிய அந்தக் கோப்புகள் எல்லாம் கூட சுனாமி களைப்பில் தூங்கிக் கொண்டிருந்தன. அந்தக் கோப்புகள் செயல்படவில்லை.

எனவே அதற்குப் பிறகு ஆட்சிக்கு நாங்கள் வந்தோம். 17 மாதங்கள் அவர்கள் ஆட்சியிலே இருந்தபிறகு, ஆட்சிக்கு வந்த நாங்கள், பாதிக்கப்பட்ட மாவட்டங்களின் ஆட்சித் தலைவர்களை யெல்லாம் அழைத்து ஆய்வு நடத்தி என்னென்ன பாதிப்புகள், யார்யாருக்கு எந்தெந்த வகையிலே ஏற்பட்டிருக்கிறது என்பதை யெல்லாம் கண்டுபிடித்து சுனாமி மறுவாழ்வு சீரமைப்புப் பணிகள் குறித்து நடத்திய ஆய்வின் பயனாக எல்லா மாவட்டங்களிலும் அதிகாரிகள் முடுக்கி விடப்பட்டார் கள். 31.12.2006 வரை நாங்கள் எடுத்த முயற்சிகளின் காரணமாக 18 ஆயிரத்து 828 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் இந்த நிதியாண்டின் இறுதிக்குள் அந்த ஆய்வில் நாங்கள் எடுத்த முடிவின்படி 32,668 வீடுகள் கட்டி முடிக்கப்படும் என்பதை நான் அம்மையார் அவர்களுக்கும், உங்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொண்டு நிறுவனங்கள் கட்டுவதாக உறுதியளித்து இன்னும் கட்டப்பட இயலாத 3000 வீடுகளை கட்டி முடிக்க 63 கோடி ரூபாய் செலவாகும் என்று மதிப்பீடு செய்யப்பட்டு, அரசின் சார்பிலேயே அதனைச் செய்ய ஒப்பந்த புள்ளிகள் கோரப் பட்டிருக்கின்றன என்பதையும் நான் இங்கே தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

அம்மா அவர்களுடைய அறக்கட்டளையின் சார்பாக கட்டப்பட்டுள்ள வீடுகள் இன்றைக்கு திறந்து வைக்கப்பட்டுள்ளன. அந்த வீடுகளை முதலில் நான் தொலைவில் இருந்து பார்த்த போதே நான் மகிழ்ந்து போனேன், பூரித்துப் போனேன். இவ்வளவு அழகான வீடுகள், நமக்கொன்று கொடுத்தால் கூட நன்றாக இருக்கும் போலிருக்கிறதே என்று எண்ணுகின்ற அளவிற்கு அவ்வளவு அழகான வீடுகள் இங்கே கட்டப்பட்டுள்ளன. அப்படி பார்த்த போது எனக்கேற்பட்ட பரவசத்தால், எனக்கேற்பட்ட ஆர்வத்தால் காரை அந்த இடத்திற்கே விடச் சொல்லி, அந்த வீடுகளைப் பார்த்து விட்டு, அதிலே ஒரு வீட்டின் உள்ளேயே சென்று நாங்கள் பார்த்தோம். மிக அழகாக, அதே நேரத்தில் வசதியாக, வாழ்வதற்கேற்றதாக அந்த வீடுகள் அமைந்துள்ளன. அந்த வீடுகளிலே மீனவ மக்கள், பாதிக்கப்பட்ட மக்கள், ஏழையெளிய மக்கள் வாழப் போகிறார் கள் என்பதை எண்ணிப் பார்க்கும்போது நான் மிகுந்த நம்பிக்கை கொண்ட பூரிப்பும், மகிழ்ச்சியும் அடைகிறேன்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட இத்தகைய வீடுகளை கண்டறிய விரிவான கணக்கெடுப்புப் பணிகளை மேற்கொள்ள தேவைப்படும் நிலங்களைக் கையகப்படுத்த முப்பது கோடியே 12 இலட்சம் ரூபாய் அரசின் சார்பில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு வீடுகளைக் கட்டுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு என்ன தான் அரசு திட்டங்களைத் தீட்டினாலும், ஏன் நம்முடைய அம்மையார் அவர்களின் மடத்தின் சார்பிலே கூட திட்டங்களைத் தீட்டினாலும் அடுத்த வரிசையில் இருக்கின்ற அதிகாரிகளின் ஒத்துழைப்பு, அவர்களின் வேகம் இருந்தால் தான் இவைகள் விரைவில் முடி வடைய முடியும். நான் அரசின் சார்பில் அதிகாரிகளைக் கேட்டுக் கொள்வேன். விரைவில் இந்த வீடுகள் எல்லாம் கட்டி முடிக்கப்பட வேண்டும்.

இது தவிர ராஜிவ் காந்தி சுனாமி மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ் 550 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 22 ஆயிரம் வீடுகள் கட்ட தற்போது ஒரு திட்டம் தீட்டப்பட்டுள்ளது. நான் டெல்லிக்குச் சென்ற போது இந்தத் திட்டத்தை வகுத்துக் கொண்டிருந்தார்கள். அப்போது நான் தான் இந்தத் திட்டத்திற்கு ராஜிவ் காந்தி சுனாமி மறுவாழ்வுத் திட்டம் என்று பெயர் வைக்கலாம் என்று சொன்னேன். அது ஏற்றுக் கொள்ளப்பட்டு இந்தத் திட்டம் தீட்டப்பட்டு, விரைவில் இது நடைமுறைக்கு வரவிருக்கிறது என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மாத்திரமல்ல, இங்கே மாதா அமிர்தானந்தமயி மடத்தின் சார்பாக அதன் அறங்காவலர் என்னிடம் ஒரு கடிதம் கொடுத்திருக்கிறார். அந்தக் கடிதத்தில், "மாதா அமிர்தானந்தமயி மடம் ஏழைகளுக்காக "அமிர்த குடீரம்'' என்ற பெயரில் இலவச வீடுகளைக் கட்டிக் கொடுத்து வருகிறது. 220 சதுர அடி பரப்பில் ஒரு சிறிய அறை, தனிச் சமையல் அறை, குளியல் அறை மற்றும் கழிவறை

வசதிகளுடன் இந்த வீடுகள் கட்டப்படுகின்றன. மாண்புமிகு முதல்வர் அவர்கள் விரும்பினால் தமிழ்நாட்டில் இலவசமாக மனை வழங்கும் பகுதிகளில், மாதா அமிர்தானந்த மயி மடம் இதைப் போல 500 வீடுகள் கட்டிக் கொடுக்க "தாயாராக'' உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறது'' என்று எழுதிக் கொடுத்திருக்கிறார்கள்.

நான் தமிழில் எது வந்தாலும் அதைப் படிக்கும்போது "ப்ரூப்'' பார்க்கும் வழக்கம், அதாவது எழுத்துப் பிழை இருக்கிறதா என்று பார்ப்பது வழக்கம். பிழை கூட நாம் போற்றத்தக்க வகையில் இந்தக் கடிதத்தில் அமைந்திருக்கிறது. அதாவது "இதைப் போல 500 வீடுகள் கட்டிக் கொடுக்க தயாராக உள்ளது'' என்பதற்குப் பதிலாக "தாயாராக உள்ளது'' (பலத்த சிரிப்பு, கைதட்டல்) என்று எழுதியிருக்கிறார்கள். ஏன் என்றால், இது மாதா மடம் அல்லவா? அதனால் "தாயாராக'' உள்ளது என்று எழுதியிருக்கிறார்கள். அம்மா, நீங்கள் தாயாராகவே இருந்து, தமிழ்நாட்டு மக்களுக்கு – தமிழ் நாட்டு மக்களும் கேரளத்து மக்களைப் போன்றவர்கள் தான் – எப்படி ஐரோப்பா கண்டத் தில் இருக்கின்ற மக்களையெல்லாம் உங்களின் மக்களா கக் கருதுகிறீர்களோ, அதைப் போல இங்கே உள்ள மக்களையும், உங்கள் மக்களாகவே கருதி, இந்த 500 வீடுகள் அல்ல, இதை நாங்கள் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்கிறோம் – தொடர் முயற்சியாக ஒரு அரசே எல்லா காரியங்களையும் மக்களுக்காக செய்து விட முடியாது.

அரசு மக்களிடத்தில் வரி வாங்குகிறது, அந்த வரியை மக்களுக்கே திருப்பித் தருகிறது. அதைப் போலத்தான் தங்களுக்கும் மக்கள் காணிக்கை அளிக்கிறார்கள். அந்தக் காணிக்கையை நீங்கள் மக்களுக்கே திருப்பி அளிக்கிறீர்கள். அதைத்தான் ஏழை மக்களுக்கு – அவர்களின் சிரிப்பைக் காண்பதற்கு நீங்கள் செலவழிக்கிறீர்கள். உங்கள் சிரிப்பே

கவர்ச்சிகரமானது, அதைப்போல ஏழை மக்களை நீங்கள் சிரிக்க வைத்தால், அந்தச் சிரிப்போடு இணைந்து உலகமே கவர்ச்சிகரமாக இருக்கக்கூடிய அளவிற்கு உங்கள் சிரிப்பு அமைந்திருக்கின்றது. "ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்'' என்றார் எங்களை ஆளாக்கிய அண்ணா, அண்ணாவை உருவாக்கிய பெரியார். அவர்கள் இருவரும் சேர்த்த அந்த இலட்சியங்களை உங்களிடம் எடுத்துச் சொல்லி, நீங்கள் வழங்குகின்ற இந்த வீடுகளை மகிழ்ச்சியோடு, நன்றியோடு பெற்றுக் கொள்கிறோம்.

விதவைகள், ஊனமுற்றோருக்கு 50 ஆயிரம் பேருக்கு மாதா மாதம் ரூபாய் 150 வீதம் உதவித் தொகை வழங்கிவருவதாகவும், அந்தத் திட்டத்தின் கீழ் நாகப்பட்டினம் மாவட்டத்திலும் உதவி வழங்க அதனைத் தொடங்கி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கின்றீர்கள்.

அது போலவே சுயதொழில் தொடங்கும் திட்டத்தின்கீழ் ஏழைகளுக்கு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தையும் தொடங்கி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள். அதனைத் தொடங்கி வைப்பதில் எனக்கென்ன ஆட்சேபணை? அவற்றைத் தொடங்கி வைத்து அனைவருக்கும் நன்றி கூறி, அம்மையார் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்.

*****

செஞ்சி இராமச்சந்திரன் இல்ல மணவிழா வரவேற்பில் முதல்வர் கலைஞர் ஆற்றிய உரை

செஞ்சி இராமச்சந்திரன் இல்ல மணவிழா வரவேற்பில் முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:–

தம்பி செஞ்சி ராமச்சந்திரன் அவர்களுடைய அன்பு மகள் மல்லிகைக்கும், கடலூர் மாவட்டம், சாரங்கபாணி, வசந்தா ஆகியோரின் அன்பு மகன் அருள் பிரகாஷ்க்கும் நம் அனைவருடைய இனிய வாழ்த்துக்களோடு நடைபெற்ற மணவிழா நிகழ்ச்சியை யொட்டி, அந்த நிகழ்ச்சிக்கு நாமெல்லாம் செல்ல இயலாத சூழ்நிலையின் காரணமாக நமக்கென்றே ஒரு விழாவினை ஏற்பாடு செய்து, வரவேற்பு விழா என்ற பெயரால் இதனை நடத்திக் கொண்டிருக்கின்ற மணமக்கள் வீட்டாருக்கு, குறிப்பாக தம்பி செஞ்சி ராமச்சந்திரன் அவர்களுக்கு என்னுடைய நன்றியையும், பாராட்டுகளையும் அவர் சார்பாக வீட்டு விளக்குகளாக இன்றைக்குத் திகழ்கின்ற மணமக்களுக்கு இனிய வாழ்த்துக்களையும் வழங்குகின்றேன்.

ஏறத்தாழ ஒரு மாத காலமாக ஓயாத சுற்றுப் பயணத்தின் காரணமாக உடல்நிலை கெட்டு, குரல் வளம் குறைந்து மணமக்களை உங்களோடு இணைந்து வாழ்த்த வேண்டு மென்ற அவாவோடு உங்கள் முன்னால் அமர்ந்திருக்கின்றேன்.

தமிழர் தலைவர் வீரமணி அவர்கள் பேசும்போது இன்றைக்கு யார்யாரெல்லாம் ஆன்மீக வாதிகள் எல்லாம் கூட நம்மை நோக்கி வந்துகொண்டிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். இது நம்முடைய ஈர்ப்புத் தன்மை என்று தம்பி திருமாவளவன் சொன்னார். எந்தத் தன்மையாக இருந்தாலுங்கூட, தமிழ்நாடு இன்றையதினம் இது போன்ற உணர்வை, ஒற்றுமையை விரும்புகின்றது.

எல்லோரும் சேர்ந்து தமிழகத்தை, தமிழ்நாட்டு மக்களைக் காப்பாற்ற வேண்டும், உரிமைகளைப் போற்றிப் பாதுகாக்க வேண்டுமென்ற உணர்வு இன்றைக்கு மலர்ந்திருக்கின்ற காரணத்தால் தான் நம்மை நோக்கி வருகின்றவர்கள் நாம் வென்று விட்டோம் என்பதால் வருபவர்கள் அல்ல, அனைவரையும் அரவணைத்துச் சென்று எல்லோரும் சேர்ந்து இந்த இலட்சியத் திலே வெற்றி பெற வேண்டுமென்ற குறிக்கோளோடு பாடுபடுகிறோம் என்பதற்காகத் தான்!

இதைக் கூடச் சில பேர் கேலி செய்கிறார்கள். அப்படி போனலும் தப்பு, இப்படி வந்தாலும் தப்பு, வேறு யார் செய்தாலும் அவர்கள் என்ன செய்தாலும், அதை ஆதரிப்பதற்கு சில பேர் தயாராக இருக்கிறார்கள். ஆனால் நாம் மாத்திரம் ஏதாவது செய்து விட்டால் அதற்கு இது கோணல், அது கோணல், அது தவறு, இது தவறு என்று சொல்வதற்கு பலர் பந்தயம் கட்டிக்கொண்டு முந்துகிறார்கள்.

நான் அவர்களுக்கு இன்று நேற்றல்ல. நம்முடைய இயக்கத்தின் வரலாற்றைக் குறிப்பாக சுயமரியாதை இயக்கத்தின் வரலாற்றைப் பார்த்தாலே, சுயமரியாதை இயக்கம் தொடங்கிய போது, அதற்கு ஆசி வழங்கியவரே ஒரு ஆன்மீகவாதிதான். ஞானியார் சுவாமிகள், தந்தை பெரியார் அவர்கள் "குடியரசு" என்கிற பச்சை அட்டைப் பத்திரிகையை ஆரம்பித்து, பகுத்தறிவைப் பரப்ப சுயமரியாதை சங்கநாதம் செய்ய, ஆரிய ஆதிக்கத்தை வீழ்த்த, பார்ப்பனர்களுடைய ஆதிக்கத்தை வீழ்த்த, சாதி சமயம் என்றெல்லாம் சொல்லப்பட்டு, அவற்றின் காரணமாக ஏமாற்றுகின்ற காரியங்களையெல்லாம் விரட்டியடிக்க தொடங்கியது தான் "குடியரசு" பத்திரிகை.

அந்தக்காலத்தில் அந்த பச்சை அட்டை பத்திரிகையைப் பார்த்தாலே பதறி ஓடுவார்கள் பல பேர். அவர்களைப் பற்றி

விமர்சனங்கள், அவர்களால் நாட்டுக்கு ஏற்பட்ட கேடுகளைச் சுட்டிக்காட்டுகின்ற கட்டுரைகள், ஆண்டவனிலே தொடங்கி ஆளுகிறவர்கள் வரையிலே விமர்சனங்கள் – அப்படிப்பட்ட புரட்சிகரமான அந்தப் பத்திரிகையை ஆரம்பித்து வைத்தவரே, திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் சுவாமிகள்தான்!

"1925ஆம் ஆண்டு மே திங்கள் 2ஆம் நாள் உண்மை விளக்கம் அச்சுக் கூடத்தில் அச்சாகி, "குடியரசு" என்னும் வார இதழ், திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் சுவாமிகளால் தொடங்கி வைக்கப் பெற்றது" என்று தந்தை பெரியார் அவர்களுடைய வரலாறு குறிப்பிடுகிறது. காரணம் என்ன? ஞானியார் சுவாமிகளுக்கும் அவர் மீது நம்பிக்கை உண்டு. தந்தை பெரியார் அவர்களுக்கும் அவருடைய கொள்கை மீது அசையாத பற்று உண்டு, உறுதி உண்டு, தன்னை எவரும் கவிழ்த்து விட முடியாது, தன்னுடைய கொள்கைகளை யாரும் அபகரித்து விட முடியாது என்கின்ற தைரியமும், துணிவும் தந்தை பெரியாருக்கு உண்டு. (கைதட்டல்) அதனால் தான் "குடியரசு" பத்திரிகையைத் தொடங்கி வைக்க ஞானியார் சுவாமிகளை பெரியார் அழைத்தார். அவர் அதைத் தொடங்கி வைத்தார். அப்போது ஞானியார் சாமி சொல்லுகிறார்.

"நாட்டிலுள்ள உயர்வு தாழ்வு மனப்பான்மை ஒழிந்து, சமத்துவ உணர்வு பரவி, சமயத் துறையிலுள்ள கேடுகள் ஒழிய, நாயக்கரின் "குடியரசு" பாடு பட்டால் தனக்கு மிக்க மகிழ்ச்சி என அந்தத் தமிழ்த் துறவி பேசினார்." என்று அய்யாவினுடைய வரலாற்றுக் குறிப்பிலே இவ்வாறு எழுதப்பட்டுள்ளது.

"மனச்சாட்சிக்கு உண்மை என்று பட்டதைத் தெரிவிக்க அஞ்சக் கூடாது; மக்களுக்குள் சுயமரியாதை, சமத்துவம், சகோதரத்துவம் ஓங்கி வளர வேண்டும்; உயர்வு தாழ்வு உணர்ச்சி நாட்டிலுள்ள சாதிச் சண்டைக்குக் காரணமாயிருத்தலால் அது

ஒழிக்கப்படவேண்டும்; தேசத்தை மட்டுமே முன்னிறுத்தி வைக்காமல் ஒவ்வொரு வகுப்பும் முன்னேற வேண்டும்''

இது தந்தை பெரியார் அவர்கள் வெளிப்படையாக வெளியிட்ட கருத்து.

இந்த இரண்டு கருத்துகளுக்கும் இடையே ஒரு நூலிழை வித்தியாசம் இருக்கலாம். இருந்தாலுங்கூட அவர்கள் இருவரும் ஒன்று சேர்ந்து ஒரு பத்திரிகையைத் தொடங்கி யதற்கு காரணம், தமிழ்நாட்டு மக்களிடையே ஒரு விழிப்புணர்ச்சி ஏற்படுத்த வேண்டும். அது ஆன்மீகமாக இருந்தாலும் சரி, அறிவுப் புரட்சியாக இருந்தாலும் சரி, நான் இரண்டும் ஒன்று என்று சொல்ல மாட்டேன். அதனால் முடிந்ததை அது செய்யப்பட்டும், எங்களால் முடிந்ததை நாங்கள் செய்கிறோம் என்கின்ற அந்தத் துணிவும், தெம்பும் நமக்கு இருக்கின்ற காரணத்தால் என்னால் அப்படி சொல்ல முடிகிறது.

இன்றைக்கு ஏதோ நாம் ஞானிகளை, ஆன்மீக வாதிகளைச் சந்திக்கிறோம் என்பதல்ல. நான் வெளிப்படையாகச் சொல்ல வேண்டுமேயானால், பாபா என் இல்லத்திற்கு வந்தார். விழாவிலே கலந்து கொண்டார். 200 கோடி ரூபாய்க்கு மேல் தெலுங்கு கங்கை திட்டத்திற்காக பணத்தை அவரே செலவழித்தார். அதற்காக நன்றி கூற நான்கு முதலமைச்சர் வருகிறார்கள், மத்திய அமைச்சர் வருகிறார், என்றெல்லாம் கூறி அழைக்கிறார்கள் என்கிறபோது, அதற்கு நான் என் கொள்கைகளை இறக்கி கூடையிலே வைத்து விட்டு வருகிறேன் என்று சொல்லிவிட்டா நான் அங்கே போனேன்? இல்லை. அப்போது கூட, யாரைக் கலந்து கொள்ள வேண்டுமோ அவரை கலந்து கொண்டுதான் அந்த விழாவிற்கு ஒப்புதல் கொடுத்தேன். அவர் யார் என்று உங்களுக்குத் தெரியும்? ஆருயிர் இளவல் வீரமணி அவர்கள். அவரைக் கலந்து கொண்டு தான் நான் அங்கே சென்றேன்.

எனவே யாரும் கொள்கைகளை விட்டுக் கொடுத்து விட மாட்டார்கள். அதுவும் திராவிட இயக்கத்தைச் சேர்ந்த நாங்கள், அண்ணாவின் உண்மைத் தம்பிகள், பெரியாருடைய உண்மை மாணவர்களாகிய நாங்கள் கொள்கைகளை விட்டுக் கொடுத்து அது என்ன தான் வரட்டுமே, வானத்தையே கிழித்து வாரி இறைக்கட்டுமே பொற்காசுகளை, அதற்காகக் கொள்கைகளை விட்டுக் கொடுத்து விட மாட்டோம். என்னைப் பொறுத்தவரையில் உங்களுக்குச் சொல்ல வேண்டுமேயானால், வடலூர் வள்ளலார் இராமலிங்க அடிகளாரை நாம் பாராட்டுகிறோமே, போற்றிக் கொண்டிருக்கிறோமே, "வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்" என்று அவர் பாடியதின் பொருளை உணர்ந்தவர்கள் – அதே இராமலிங்க அடிகள்

"சாதி சமயங்களிலே வீதி பல வகுத்த
சாத்திரக் குப்பைகளெல்லாம் பாத்திரமன் றெனவே
ஆதியிலென் னுளத்திருந்தே அறிவித்த படியே
அன்பாலின் றுண்மைநிலை அறிவிக்க அறிந்தேன்
ஓதி உணர்ந்தோர் புகழுஞ் சமரச சன்மார்க்கம்
உற்றேன் சிற்சபை காணப் பெற்றேன் மெய்ப்
பொருளாஞ்
சோதி நடத்தரசையென்றன் உயிர்க்குயிராம் பதியைச்
சுத்த சிவ நிறைவையுள்ளே பெற்று மகிழ்ந்தேனே

இன்று வந்தெனை நீ அடிமை கொள்ளாயேல்
எவ்வுல கத்தருந் தூற்ற
நன்று நின்றன் மேல் பழி வரும் என்மேல்
பழியிலை நவின்றனன் ஐயா
அன்று வந்தொரு சேய்க் கருள் புரிந்தாண்ட

அண்ணலே ஒற்றியூர் அரசே
நின்று சிற்சபைக்குள் நடஞ்செயும் கருணா
நிலயமே நின்மலச் சுடரே.''

என்றும் ஆண்டவனைப் பாடியிருக்கிறார். அவர் ஆண்டவனைப் பற்றி இவ்வாறு புகழ்ந்து சிலாகித்துப் பாடுகிறார். அந்தக் கருத்து அவரை ஒரு ஆன்மீகவாதி என்று அடையாளம் காட்டுகிறது என்றாலும் கூட, நாம் அதை ஒதுக்கிவிட்டு "வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினாரே'', அந்த உள்ளத்தைப் பாராட்டுகிறோம். அதைப் போல சாத்திரக் குப்பை என்றாரே, அதைப் பாராட்டுகின்றோம், அந்தக் கருத்தை ஏற்கின்றோம்.

இது இன்று நேற்றல்ல, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, நாம் – நம்முடைய கருத்துகளுக்கு மாறுபட்டவர் களை வெறுத்து ஒதுக்குபவர்கள் அல்ல. அந்தத் தன்மைகளை மட்டுமே வெறுத்து ஒதுக்குவோம். நாம் பார்ப்பணியத்தை வெறுத்து ஒதுக்குவோம். தனிப்பட்ட பார்ப்பனர்களை வெறுத்து ஒதுக்குபவர்கள் அல்ல. அந்தக் கொள்கைகளை ஏற்க மாட்டோம், ஆனால் அந்தக் கொள்கைகளைப் பேசுகின்றவர்களை, தனிப்பட்ட மனிதர்கள் என்றைக்கும் மதிப்பவர்கள். மாற்றுக் கருத்து கூடவே கூடாது என்று கூறி கருத்துரிமை மீது கை வைப்பவர்கள் அல்ல நாம். அதனால் தான் திராவிட இயக்கத்தின் பல போராட்டங்களை, மிக முக்கியமான போராட்டம், இந்தி ஆதிக்கத்தை எதிர்த்த போராட்டத்தில், உங்களுக்குத் தெரியாது என்று கருதுகிறேன், பலபேர் அந்த வரலாற்றைப் படித்திருக்க மாட்டீர்கள், உணர்ந்திருக்க மாட்டீர்கள். இந்தி ஆதிக்கத்தைக் கொண்டு வந்தது சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார். அதை எதிர்த்துப் பேசிய தந்தை பெரியாருடைய மேடையிலே இன்னொரு ராஜ கோபாலாச்சாரியார் பேசினார். அவர் பெயர் பரவஸ்து ராசகோபாலாச்சாரியார். நான் அவரை பல மேடைகளிலே பார்த்திருக்கிறேன். நானும் அவரும்

கூட திருவாரூரிலே ஒரே மேடையிலே பேசியிருக்கிறோம். தங்கப் பூக்கள் மின்னுகின்ற பொன்னாடையைப் போர்த்திக் கொண்டு வந்து பேசுவார். பூணூல் போட்டிருப் பார், நாமம் தரித்திருப்பார், ஆன்மீகத்தின் அடையாளங்கள் அத்தனையும், வைதீகத்தின் அடையாளங்கள் அத்தனையும், வைதீகத்தின் சின்னங்கள் அத்தனையும் இருக்கும். ஆனால் தமிழை வாழ வைக்க வந்திருக்கிறேன், இந்தி ஆதிக்கத்தை எதிர்க்க வந்திருக்கிறேன் என்று சொல்லுவார். அந்த ஒரேயொரு இழை தான் அவரையும் நம்மையும் இணைத்ததே தவிர, வேறல்ல.

இப்படி பல அடிகளார்கள் நம்முடைய இயக்கத்திலே, அதிலும் தமிழ் இயக்கத்திலே தங்களுடைய தொண்டினை ஆற்றியிருக்கிறார்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டுமேயானால் கிருபானந்தவாரியார் தமிழுக்காக தன்னையே அர்ப்பணித்துக் கொண்டவர் என்றெல்லாம் அவரைப் பற்றிச் சொல்வார்கள். "அவல்" "பொறி" என்ற இரண்டு வார்த்தைகளை எடுத்துக் கொண்டு ஆறு மாதங்கள் அதைப்பற்றியே கதாகாலட்சேபம் செய்வார். திருப்புகழில், பழைய இலக்கியங்களில் பாண்டித்யம் பெற்றவர். அவரை இளம் வயதிலேயே மூர்த்தன்யமாக எதிர்த்தவர்களில் நான் ஒருவன். அவருடைய கூட்டங்களுக்கு மாணவனாகச் சென்று அவரை கேள்வி கேட்டு மடக்க முனைந்தவன் – மடக்கினேனோ என்னவோ – சரித்திரம் சொல்லும் உங்களுக்கு. ஆண்டவன் ஆகாரத்திற்காக ஆடுமாடுகளுக்கும் மனிதனுக்கும் தாவரத்தைக் கூடப் படைக்கவில்லை, ஆகவே ஆகாரத்திற்காக தாவரத்தைச் சாப்பிடுவது கூடப் பாவம் என்று அந்த அளவிற்கு வீர சைவம் பேசியவர் அவர். அவரை நான் குறுக்குக் கேள்விகள் கேட்டு, இளமைப் பருவத்திலே, மாணவனாக இருந்த போதே நானும் அவரும் போர்க்களத்திலே நின்றது உண்டு.

அதைப் போல அவர் பெரியாரைப் பற்றி விமர்சித்தது உண்டு. பேரறிஞர் அண்ணாவைப் பற்றி விமர்சித்தது உண்டு. ஆனால் காலம் மாற மாற நாம் அங்கே போனோமா, அவர் இங்கே வந்தாரா என்றால் அவர் தான் இங்கே வந்தார். சேலத்திலே ஒரு கல்லூரியை உருவாக்கினார். அந்தக் கல்லூரியை திறந்து வைக்க முதலமைச்சராக இருந்த நான் வரவேண்டுமென்று என்னை வந்து அழைத்தார்கள். பத்தாண்டுகளுக்கு முன்பு என்று நினைவு. சேலம் சென்று அந்தக் கல்லூரியைத் திறந்து வைத்தேன். அவர் மறைந்த பிறகு வேலூருக்கு அருகில் உள்ள காங்கேயநல்லூர் கிராமத்தில் அவருக்கு மணி மண்டபம் கட்டினார்கள். அந்த மணி மண்டபத்தை நான் தான் திறந்து வைக்க வேண்டுமென்று அழைத்தார்கள். போய்த் திறந்து வைத்தேன்.

ஈழத்து அடிகள் திராவிட இயக்கத்தில், தமிழ் இயக்கத்தில் நம்மோடு இருந்த ஆன்மீகவாதியாக இருந்து பிறகு அண்ணாவோடு இணைந்து விட்டவர் அவர். இப்படி பலருடைய பெயர்களை என்னால் நினைவுபடுத்த முடியும்.

குன்றக்குடி அடிகளார் யார்? குன்றக்குடி அடிகளார் நாத்திகரா? அல்ல. என்றைக்காவது அவர் தன்னை ஒரு நாத்திகர் என்று அடையாளப் படுத்திக் கொண்டதுண்டா? இல்லை. அவர் ஆன்மீக வாதி. ஆனால் அறிவியக்கத்தின்பால் அடங்காத பற்று கொண்டவர். அய்யாவின்பால், அண்ணாவின்பால், எங்களின்பால் பாசம் கொண்டவர். தமிழ் வாழ தன்னையே அர்ப்பணித்துக் கொண்டு பாடுபட்டவர். இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து நடைபெற்ற போராட்டத்தில் கலந்து கொண்டவர். அவரை நான் தமிழகத்தில் மேலவை உறுப்பினராகவே ஆக்கினேன். தமிழகத்தின் மேலவை யில் காவியாடை கட்டிய தலையிலே காவி முண்டாசு கட்டிய ஒருவர் தாடியோடு வந்து

அமர்ந்து மேலவையில் குன்றக்குடி அடிகளாரை பேச வைத்தேன் என்றால் அது ஒரு வரலாற்று அத்தியாயம்.

அப்போது அவர் ஒரு கவிதையே எழுதினார். என்னை எப்படி இந்த மேலவையிலே கொண்டு வந்து உட்கார வைத்தார் கருணாநிதி என்று கேட்டு ஒரு கவிதையே எழுதினார்.

"அருமைக் கலைஞர் நமை மேலவையில்
இருக்கச் செய்தது என்ன கருதியோ?
நெடிய நேரம் நினைந்த பின்னும்
புலப்பட வில்லை; புலப்பட வில்லை!
நமது ஆ தீனம் அஃதண் ணாமலை
ஆதீனம் ஆம் அண்ணா என்ற
முதன்மைச் சொல்லில் மூண்ட காதலோ?
பேசும் மொழியால் பெட்புறு நெறியால்
தமிழ இனத்தைச் சார்ந்தது கருதியோ?
குன்றக் குடியைக் குன்ற விடாமல்
நின்று விளக்கிட நினைத்தோ? இவரை
ஏற்றிப் பார்க்கலாம் என்ற எண்ணமோ?
ஒதுங்கி மடத்தில் உட்கார்ந்தவரை
மன்றில் நிறுத்தி வேடிக்கை பார்க்கவோ?
பிறந்த மொழியைப் பயின்ற நாள் தொட்டுத்
தொண்டு நெறியின் சுவை தேறிய நீ
நம்மையும் தொண்டு நெறியில் நடாத்தித்
தூண்ட கருதியோ?"

ஏன் என்னை மேலவையிலே உறுப்பினராக ஆக்கினீர்கள்? நானும் தமிழ்த் தொண்டு ஆற்ற வேண்டும் என்பதற்காகவா என்று கேட்டு, அருமையான சொற்பொழிவுகளை மேலவையிலே ஆற்றியவர் குன்றக்குடி அடிகளார் என்று சொன்னால், அந்தச் சொற்பொழிவுகள் எதிலும் தி.மு.கழகத்தின் கொள்கைகளுக்கு எதிராக அல்லது மாறாக அல்லது விரோதமாக பேசியதில்லை.

அத்தனையும் தமிழ்நாட்டை உயர்த்த, தமிழை உயர்த்த தி.மு. கழக அரசு எடுக்கின்ற முயற்சிகளுக்கு முனைந்து, துணிந்து துணை நிற்க பயன்பட்டதே அல்லாமல் அவரால் எந்தத் தீங்கும் விளையவில்லை திராவிட இயக்கத்துக்கு!

எனவே நம்மோடு யார் வந்து, நம்மால் ஈர்க்கப்பட்டு வந்தால், அவர்களால் அது சுயநலம் என்று சொல்லவில்லை, பொது நல நோக்கோடு சொல்கிறேன், அவர்களால் நாட்டுக்கு நன்மை என்றால் அவர்களோடு பேசுவது, உறவாடுவது, அவர்களை வரவேற்பது தவறில்லை. நாங்கள் மாற்றுக் கருத்து உள்ளவர்களை யெல்லாம் அனுமதிக்கவே மாட்டோம் இந்த மண்டபத்திற்குள் என்று சொன்னால் அது எப்படி மனித உரிமைக்கு அப்பாற்பட்டதோ அதைப் போன்றது தான், அந்தக் கருத்து. ஏன் பயப்படுகிறார்கள்? நானும், வீரமணி அவர்களும், மற்றவர்களும் இதையெல்லாம் நம்பாதவர்கள் என்று சொன்ன போது, ஏன் நம்ப மாட்டீர்கள் என்று கேட்டார்கள். நம்புகிறோமோ இல்லையோ, நல்லவர்களை வரவேற்கிறோம் என்று சொன்னால், அது என்ன இரண்டு பேரும் ஒன்றாக ஆகிறார்கள், என்ன விஷயம் என்று ஓட்டுக் கணக்கு போட்டுப் பார்க்கிறார்கள். இரண்டு பேரும் ஒன்றாகிறார்கள் என்கிறார்கள். நாங்கள் இரண்டு பேரும் ஒன்றாக வில்லை. நாட்டை ஒற்றுமையாக ஆக்க, அந்த உணர்வுகளை எழுப்ப, தமிழன் என்கின்ற அந்த இனப்பற்றை ஏற்படுத்த எது பயன்பட்டாலும் அதைப் பயன்படுத்திக் கொள்ள நான் தயாராக இருப்பவன். பெரியாரிடத்தில் அந்தப் பாடத்தைப் பெற்றவன். ஏன் இதையெல்லாம் அன்றைக்கு கருணாநிதி ஆதரிக்கவில்லை, இதையெல்லாம் ஏன் வீரமணி ஆதரிக்கவில்லை என்று எங்களைக் கிண்டல் செய்தவர்கள், இன்று அவர்களைப் பார்த்துப் பேசினாலே, ஆகா, பேசி விட்டார்களே, பேசி விட்டார்களே என்று பயம். இவர்கள் எல்லாம் வந்தால் நம்முடைய பிழைப்பு என்ன ஆகிவிடுமோ? என்று! நான் ஒன்றும் வரப்போவது இல்லை. பயப்பட வேண்டாம் என்று நான் அந்த

ஆத்திகர்களுக்கு, அந்தக் கதாகாலட்சேபம் செய்கின்றவர்களுக்கு உறுதியளிக் கின்றேன், நாங்கள் நாங்களாகத் தான் இருப்போம், நீங்கள் இருக்கின்ற இடத்திலே நீங்கள் இருக்கலாம். ஆனால் நாங்களும் நீங்களும் சேர்ந்து நாட்டைக் காப்பாற்றுகின்ற, நாட்டு மக்களைக் காப்பாற்றுகின்ற ஒரு நிலை ஏற்படுமேயானால் அப்போது நாம் அதற்குப் பயன்படுவோம், உங்களையும் பயன்படுத்துவோம் என்ற முறையிலே தான் திராவிட இயக்கம், சுயமரியாதை இயக்கம் தன்னுடைய அணுகுமுறையைக் கொண்டிருக்கிறதே அல்லாமல், தன்னை விற்று, தன்னை அடிமையாக்கி, தான் தாள் படிந்து இன்னொருவரிடத்திலே சமரசம் செய்து கொள்ளாது. இந்த இயக்கத்திலே நாம் கொண்ட கொள்கைகளுக்கிடையே சமரசம் என்ற பேச்சுக்கே இடம் இல்லை என்பதை இங்கே நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

அதனால் தான் 1967 ஆம் ஆண்டு அண்ணா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, பெரியாருடைய கனவாக, பெரியாருடைய ஆசையாக, ஆவலாக, துடிப்பாக இருந்த சுயமரியாதை திருமணத்தை சட்டப்படி செல்லு படியாக்கிய பெருமை பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு உண்டு என்றால், பெரியாரின் கொள்கைகள் என்றைக்கும் வாழும், என்றைக்கும் அதை வாழச் செய்ய ஒரு பெரும் பட்டாளமே பெரியாரால் வளர்க்கப்பட்டிருக்கின்றது என்பது தான் அதற்கு அடையாளம்.

அப்படிப்பட்ட பட்டாளத்து சிப்பாய்களிலே ஒருவராக வளர்ந்து, இன்று அந்தப் பட்டாளத்தின் தளபதிகளில் ஒருவராக இருக்கின்ற தம்பி செஞ்சி இராமச்சந்திரன் இல்லத்தில் நடைபெறுகின்ற இந்த வரவேற்பு விழாவில் மண மக்களை நான் வாழ்த்துகின்றேன் என்றால், ஏற்கனவே நம்முடைய எல்.ஜி. அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப் போல, செஞ்சி வீட்டுத் திருமணத்திலே தான் ஒரு கருத்தைச் சொன்னேன். ம.தி.மு.க. என்பது தனி கட்சியாக ஆகி விட்டது, தி.மு.க. தனிக் கட்சியாக இருக்கின்றது, இரண்டும் இணைய வேண்டும் என்று நான் சொல்லமாட்டேன்.

அப்படிச் சொல்வது தவறு, ஆனால் இணையாமல் இருந்தாலும், பொதுப் பிரச்சினைகளில், மக்களுக்குத் தேவை யான நாட்டுப் பிரச்சினைகளில், நலிவு போக்கும் பிரச்சினைகளில், உரிமைப் பிரச்சினைகளில் ஒன்றுபட்டு – இன்றைக்கு எப்படி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் அவர்களுக்குள் பல கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், பொதுப் பிரச்சினைகளிலே ஒன்றுபட்டு, மேடைக்கு வருகிறார்களோ, அது போல நாமும் பொதுப் பிரச்சினைகளில் அவர்களை விட இன்னும் கூட அழுத்தந்திருத்தமாக செயல்படலாம் என்று சொன்னேன். அது பலராலும் வரவேற்கப்பட்டது.

செஞ்சியிலே மாத்திரம் நான் அதைப் பேச வில்லை. மைலாப்பூர் பொதுக் கூட்டத்திலும் அதைச் சொன்னேன், அது வரவேற்கப்பட்டது. ஆனால் அதை விரும்பாதவர்கள் உடைத்து விட்டார்கள். உடைத்தாலுங்கூட, என்னை உணர்ந்தவர்கள் தம்பி எல்.ஜி.,யும், தம்பி செஞ்சியும் என்ற காரணத்தால் தி.மு. கழகத்தினுடைய அந்தக் கருத்தை ஏற்றுக் கொண்டு இன்றைக்கு அவர்கள் தி.மு.கழகத்தோடு நட்பு கொண்டிருக் கிறார்கள். பல பேர் அங்கிருந்து இங்கே வருகிறார்கள். அவர்கள் தனியாகவே ம.தி.மு.க.வை நடத்த ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அது ஒரு பக்கத்திலே நடக்கும். அங்கிருந்து சில பேர் இங்கே வந்தால் வரலாம் என்று நான் ஏற்கனவே அழைப்பு விடுத்திருக்கிறேன்.

செஞ்சியார் இல்லத்தில் நடைபெறுகின்ற இந்த மணவிழா வரவேற்பில் இல்லறம் புகுந்திருக்கின்ற மணமக்களை இங்கே வாழ்த்திய எல்லா தலைவர்களோடும் சேர்ந்து நானும் வாழ்த்தி, அவர்கள் வாழ்க வாழ்க, வளமெல்லாம் பெற்று வாழ்க என்று கூறி இந்த அளவில் விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்.

******

28

திருச்சி ரெத்தினவேல் தேவர் சிலையினை திறந்து வைத்து முதல்வர் கலைஞர் ஆற்றிய உரை

திருச்சியில் 28.1.2007 அன்று இரத்தினவேல் தேவர் சிலை திறப்பு விழாவில் முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு :–

திருச்சி மாவட்டத்தில் மறைந்த பெரியவர் பெரும் தியாகி இரத்தினவேல் தேவர் சிலை திறப்பு விழாவில் அரசின் சார்பில் நடைபெறுகின்ற புதிய கட்டிடங்களுடைய திறப்பு விழாவிலும், வளர்ச்சித்திட்ட பணிகளுக்கான அடிக்கல் நாட்டு விழாவிலும் நலத்திட்ட உதவிகள் வழங்குகின்ற விழாவிலும் திருச்சி மாநகர காவல்துறையின் வசதிக்காகவும் செயற்கைக் கோள் உதவியுடன் கூடிய ரோந்து வாகனப் பணிகளை துவக்கி வைக்கின்ற நிகழ்ச்சியிலும் போக்குவரத்து விதிகளை அமல் படுத்த கையக கணினிகள் மற்றும் வானலை சுழற் கேமராக்கள் மூன்று கோடி ரூபாய் செலவில் பொருத்தப்படுவதை தொடங்கி வைக்கின்ற நிகழ்ச்சியிலும் கலந்து கொண்டமைக்காக நான் பெருமகிழ்ச்சி யடைகின்றேன்.

இங்கே தாமதமாக; ஆனால், நாமெல்லாம் இன்று மகிழத் தக்க விதத்தில் திருச்சியிலே தேவர் பெருமகனாருடைய சிலையை திறந்து வைத்திருக்கின்றோம். இந்தச் சிலை இங்கே திறக்கப்பட வேண்டும் என்று ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக திருச்சி நகரத்து மக்களுக்கு ஆவல் எழுந்த போதிலும், அந்த ஆவலை தீர்த்து வைக்கின்ற பணியை நம்முடைய கோபால்ஜி போன்றவர்கள் தொடங்கி, கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு அந்தப் பணிக்கான தொடக்க முயற்சிகளெல்லாம் மேற்கொள்ளப்பட்டு,

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அந்தச் சிலை வைப்பதற்கு ஒப்புதல் தந்து, திறந்து வைப்பதற்கு சம்மதம் வழங்கி எல்லாம் நடந்த பிறகு ஒரு விரும்பத்தகாத காரணத்தால், தமிழகத்திலே அமைதி நிலை நாட்ட வேண்டும் என்ற எண்ணத்தால், அது ஒத்தி வைக்கப் பட்டு, அதன் பிறகு வந்த ஆட்சியில் இந்தச் சிலை வைப்பதற்கான கோப்பு உருவாக்கப்பட்டு, அந்தக் கோப்பு நகராமலேயே இருந்துவிட்ட காரணத்தால், சிலை திறப்பு விழாவும் நடக்காமலேயே ஆகிவிட்டது.

அதன்பிறகு, இந்தச் சிலையை இங்கே அமைக்க வேண்டும் – அதை திறந்து வைக்க வேண்டும் என்பதை தம்பி நேருவிடத்திலே சிலை அமைப்புக் குழுவினர் மற்றும் நண்பர்கள் திருச்சி மேயர் போன்றவர்கள் எடுத்துச்சொல்லி உள்ளாட்சித் துறை அமைச்சராகப் பொறுப்பேற்ற தம்பி ஸ்டாலின் என்னிடத்திலே அதை எடுத்துக்கூறி நான் உடனடியாக அந்தக் கோப்பு எங்கே இருக்கிறது என்பதை தேடிக் கண்டுபிடிக்கச் சொல்லி ஏறத்தாழ இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட தேங்கிக் கிடந்த கோப்புகளுக்கிடையே இருந்த அந்தக் கோப்பைத் தேடிப்பிடித்து, "அப்பாடா; ரெத்தினவேல் தேவரைக் கண்டுபிடித்து விட்டோம்!'' என்று அவருடைய சிலை அமைக்கின்ற அந்தப் பணியினை உடனடியாக நிறைவேற்ற தொடர்புடைய அதிகாரிகளுக்கும், தொடர்புடைய துறைகளுக்கும் ஆணை பிறப்பித்து அந்த ஆணை இன்றைய தினம் நிறைவேறுகின்ற மகிழ்ச்சிகரமான காட்சியை நாம் இங்கே கண்டு கொண்டிருக்கின்றோம்.

தேவர் அவர்கள் என்று சொன்னால், தமிழகத்திலே இரண்டு பேருடைய பெயர்தான் எல்லோருக்கும் நினைவுக்கு வரும். ஒன்று – பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர். இன்னொன்று – இன்று திறந்து வைக்கப்பட்டிருக்கின்ற சிலையாக காட்சி தருகின்ற

பி.ஆர். தேவர் – இரத்தினவேல் தேவர். இந்த இரண்டு தேவர்களுடைய பெயர்தான் நினைவுக்கு வரும்.

முத்துராமலிங்கத் தேவர் அவர்களுடைய புகழுக்கு ஏற்ப, அவருடைய கீர்த்திக்கு ஏற்ப அவரைப்பற்றி பரவியிருக்கின்ற வீரபிரதாபங்களுக்கேற்ப கட்டுமஸ்தான தேகம் படைத்தவர் – திருச்சி தேவரைப் பற்றி அவருடைய வீரத்தைப் பற்றி அவருடைய செயல்பாடுகளைப் பற்றி நாடு பேசினாலும், அவரை நேரில் பார்த்தால் இவரா? என்று ஆச்சரியப்படத் தோன்றும். எலும்பு உருவம் – ஆனால் இரும்பு இதயம் கொண்ட ஒருவர் உண்டென்றால், அது திருச்சி ரெத்தினவேல் தேவர்தான். அப்படிப்பட்ட ரெத்தினவேல் அவர்கள் முதலில் நீதிக் கட்சியினுடைய கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு பின்னர் 1924ஆம் ஆண்டு – எனக்கு நன்றாக நினைவிருக்கக் கூடிய ஆண்டு, நான் பிறந்த ஆண்டு – அவர் காங்கிரஸ் இயக்கத்திலே தன்னை இணைத்துக் கொண்டு, அதுவும் சாதாரணமாக அல்ல, இங்கே வந்த ஒரு காங்கிரஸ் தலைவரிடத்திலே கையெழுத்து போட்டு உறுப்பினராகச் சேர்ந்தல்ல – வடக்கே சென்று காந்தி யடிகளுடைய ஆசிரமத்திலே தன்னை காங்கிரஸ்காரராக இணைத்துக் கொண்டு வந்தவர்.

அப்படிச் செல்லும்போது வெளிநாட்டு உடைகளை அணிந்துகொண்டு சென்ற அவரைப் பார்த்த காந்தியடிகள் காங்கிரசிலே சேர வருவதாகச் சொல்கிறீர்கள் – அதற்கான உடை இல்லையே இது என்று கேட்டபிறகு அன்றைக்கு அந்த உடைகளை தூக்கியெறிந்துவிட்டு கதராடை புனைந்தவர்தான் கடைசி வரையிலே அந்தக் கதராடையிலே காட்சி தந்த உறுதி படைத்த ஒரு உத்தமர் ரெத்தினவேல் தேவர் அவர்களாவார்கள்.

அவர் எவ்வளவு பிடிவாத குணம் கொண்டவர் – அதே நேரத்தில் எவ்வளவு சாகச குணம் உள்ளவர் – எந்த அளவிற்கு

அவர் இளவயதிலேயே அந்த குணங்களையெல்லாம் பெற்றிருந்தார் என்பதை அவருடைய இளமைக்கால வரலாறு விளக்குகிறது. அவர் சென்னையிலே கிறித்தவக் கல்லூரியிலே படித்துக் கொண்டிருந்தபோது அப்போது – இப்போது இருப்பதைப்போல கிரிக்கெட் பந்தயங்கள் அடிக்கடி சென்னையில் நடப்பதுண்டு. ரெத்தினவேல் தேவர் மாணவப் பருவத்தில் கிரிக்கெட் விளையாட்டில் மிகுந்த ஆர்வம் படைத்தவர்.

இப்பொழுது சென்னையில் அமைந்திருக்கின்ற சேப்பாக்கம் மைதானத்தில் கிரிக்கெட் பந்தயம் நடைபெற போகிறது என்ற செய்தி விளம்பரப் படுத்தப்பட்டதும் அந்தக் கல்லூரியிலே படிக்கின்ற மாணவர்கள் எல்லோருமல்ல – ஒரு பகுதியினர் அந்தப் பந்தயத்தைக் காண வேண்டும் என்பதற்காக – மாணவர்களைப் பற்றி நான் சொல்ல வேண்டியதில்லை உங்களுக்கு – நானும் மாணவனாக இருந்தவன்தான் – பந்தயத்திற்கு செல்ல வேண்டும் என்று கடிதம் எழுதினால் விடுப்பு தர வேண்டுமென்று கேட்டால், லீவு லெட்டர் எழுதினால் கிடைக்காது என்பதற்காக வயிற்று வலி என்றும் தலைவலி என்றும் பாட்டி இறந்துவிட்டார் என்றும் அண்ணன் இறந்துவிட்டார் என்றும் சில மாணவர்களுக்கு பலமுறை பாட்டி இறப்பார்கள் (பலத்த சிரிப்பு) இப்படியெல்லாம் லீவு லெட்டர் எழுதி விட்டு, கிரிக்கெட் மைதானத்திற்கு மாணவர்கள் சென்றார்கள்.

அதிலே அவர்களை எல்லாம்விட கிரிக்கெட்டில் அதிக ஆர்வம் உடைய ரெத்தினவேல் தேவர் அவர்கள் அப்படிக் கடிதம் எழுதாமல், "நான் இன்றைக்கு கிரிக்கெட் விளையாட்டைப் பார்க்கப் போகிறேன் – ஆகவே எனக்கு லீவு வேண்டும்" என்று கடிதம் எழுதி, கல்லூரி முதல்வருக்கு எழுதி அனுப்பிவிட்டு கிரிக்கெட் மைதானத்திற்குச் சென்றார். மறுநாள் வந்தால், அவரை உள்ளே அனுமதிக்காமல், உனக்கு ஒரு அணா அபராதம்

என்று விதித்து – அந்த லீவை அனுமதிக்க முடியாது என்று சொல்லி விட்டார்கள் கல்லூரி நிர்வாகத்தினர். அதற்காக ஒரு அணா அபராதம் கட்டினாரா என்றால், இல்லை. அவர் ஒன்றும் வறுமையிலே உழலுகின்ற குடும்பத்தைச் சேர்ந்தவர் அல்ல. ஒரு அணா கிடைக்காதவர் அல்ல. ஒரு அணா கிடைத்தாலும்கூட ஏன் நாம் ஒரு உண்மையைச் சொல்லி லீவு கேட்டபோது, அதற்கு அபராதம் கட்ட வேண்டும் என்ற பிடிவாத குணம் காரணமாக ஒரு அணா கட்ட முடியாது என்றார். ஒவ்வொரு நாளும் இந்த ஒரு அணா அபராதமாக ஒரு அணா வீதம் சேர்ந்து ஒரு மாத காலத்திலே முப்பது அணாக்களுக்குமேல் அது ஆகிவிட்டது. கடைசியாக அவரை அழைத்து விசாரித்த போது இன்னென்னார் வயிற்று வலி என்றும், தலைவலி என்றும், பாட்டி செத்து விட்டார் என்றும், பொய் கடிதங்களை காரணங்களாகச் சொல்லி அவர்கள் லீவு கேட்டார்கள். பொய்யர்களுக்கு நீங்கள் கிரிக்கெட் பார்க்க அனுமதி கொடுத்திருக்கிறீர்கள். நான் உண்மையைச் சொல்லி கிரிக்கெட் பார்க்க என்று லீவு கேட்டால் உண்மையானவனுக்கு லீவு கொடுக்க மறுத்து விட்டீர்கள். அதனால் தான் அந்த ஒரு அணா அபராதத்தை நான் கட்ட மறுத்தேன் என்று சொன்னவுடன், அத்தனை ஆசிரியர்களும் அவருடைய வாய்மையைப் பாராட்டி, அவரை அந்த அபராதமே கட்ட வேண்டாம் என்று சொல்லி, கல்லூரியில் அனுமதித்தார்கள் என்பது அவருடைய இளமைக்கால வரலாற்றிலே ஒரு எழுச்சிமிக்க செய்தியாகும்.

இதனை நான் சொல்லுவதற்குக் காரணம், அப்பொழுதே உண்மையை உரைத்து, வாய்மைக்கு வாய்ப்பளித்து, . வாய்மையின்படி நடந்து, தவறு இழைக்காமல், தண்டனை வந்தாலும் பரவாயில்லை என்று தைரியமாக போரிட்ட அந்த போராட்டக் குணம் இளமைக் காலத்திலே தேவர் அவர்களுக்கு இருந்தது என்பதற்கு இது ஒரு அடையாளமாகும்.

அப்படிப்பட்ட தேவருடைய சிலையைத்தான் இங்கே நாம் திறந்து வைத்திருக்கிறோம். இந்த நல்ல நாளில் அவருடைய புகழை பேசுகிற நாளில் தமிழக மக்கள் அன்றைக்கு இந்தியா விடுதலை பெறவேண்டும், சுதந்திரம் பெறவேண்டும் என்று எதற்காக அவர்களெல்லாம் போரிட்டார்களோ, பாடுபட்டார்களோ அது நிறைவேறி இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு இடையிடையே ஏற்பட்ட பல சங்கடங்களால் காலதாமதங்களால் கவலையற்ற தன்மைகளால் முந்தைய ஆள வந்தவர்களுடைய அலட்சியத்தால் மத்தியிலும் சரி, மாநிலத்திலும் சரி, மொத்த இந்தியாவின் மக்கள் கவனிக்கப்படாமல் குறிப்பாக ஏழை எளி யவர்கள் நடுத்தர மக்கள், நலிந்த பிரிவினர், பிற்படுத்தப்பட்ட மக்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள், ஆதிதிராவிட மக்கள், தொழிலாள தோழர்கள் இவர்களெல்லாம் கவனிக்கப்படாமல் அவர்கள் வேதனையிலே இத்தனை ஆண்டுகாலம் பல ஆண்டுகாலம், வாடிட நேரிட்டது.

எதற்காக சுதந்திரம் பெற்றார்களோ, அந்த சுதந்திரத் தினுடைய சுகத்தை யாரும் சரியாக நூற்றுக்கு நூறு அனுபவிக்க முடியவில்லை. ஆனால் யார் அனுபவித்தார்கள் என்றால் நான் நேற்றைக்கு ஒரு புள்ளி விவரத்தை எடுத்து படித்துப்பார்த்தேன். இந்தியாவில் ஒரு லட்சத்து 17 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு வருமான வரி கட்டாதவர்கள் இன்றைக்கு இருக்கிறார்கள் என்பதால் அந்த அளவிற்கு வருமான வரிப் பணம் அரசுக்கு வராமலே இன்றைக்கு ஏமாற்றப்பட்டிருக்கிறது. கோடிக்கணக்கான ஏழை எளிய மக்கள் விவசாய பெருங்குடி மக்கள், குடிசையிலே வாழ்வோர், ஒழுங்காக வரி செலுத்துவோர், இவர்களெல்லாம் ஆளப்படுகிறார்கள். இப்படி ஆளப்படுகின்ற மக்களுக்கு அவர்களுடைய தேவைகளை வழங்க, நிறைவு செய்ய, ஒரு அரசு தன்னுடைய பொருளாதாரத்தை நிதி ஆதாரத்தை வளமாக வைத்துக் கொள்ளவேண்டும்.

இல்லாதவர்கள் இடத்திலே இருந்து சுரண்டுவதற்குப் பதிலாக இருப்பவர்களிடம் இருந்து எடுத்து இல்லாதவர்களுக்கு கொடுக்க வேண்டும், அதுதான் இறைவனுடைய தத்துவம். இறைவன் என்பது ஒரு உருவம் அல்ல, இறைவன் என்றால் அதற்கு நாலு கால், நாலுகை, எட்டுத்தலை அதுதான் இறைவன் என்பது அல்ல. இறைவன் என்பது ஏழையின் சிரிப்புத்தான் இறைவன் என்றார் அண்ணா. அந்த ஏழையின் சிரிப்பைக்காண ஏழு அடுக்கு மாளிகையிலே வாழுகிறானே அவன் உதவ வேண்டும். அவனையும் இந்த ஏழையையும் சம நிலைக்குக் கொண்டு வரவேண்டும். அதைத்தான் நான் 'பராசக்தி' படத்திலேகூட கடைசிக் காட்சியிலே சொன்னேன். மாளிகைகளெல்லாம் மண் மேடுகளாக ஆக வேண்டும் என்று சொல்லவில்லை, மண்மேடு, மாளிகை உயரத்திற்கு உயர வேண்டும். இரண்டும் சமமாக வேண்டும். ஏழையும், பணக்காரனும் சமமாக வேண்டும். அந்த சமத்து வத்தைத்தான் நாடு காணவேண்டும் என்று சொன்னேன். அப்படிப்பட்ட சமத்துவத்தைக் காணவேண்டுமேயானால்

"சிற்றூரும் வரப்பெடுத்த வயலும்
ஆறு தேக்கிய நல் வாய்க்காலும்
நெற்சேர உழுதுழுது பயன் விளைக்கும்
நிறையுழைப்புத் தோள்கள்''

பூரிக்க வேண்டுமேயானால், பாட்டாளி பரவசம் அடைய வேண்டுமேயானால், ஏழை வீட்டில் விளக்கெரிய வேண்டுமே யானால், ஏழைத்தாய் தன்னுடைய மகனுக்கு ஆடம்பரமாக இல்லாவிட்டாலும், சுமாராகவாவது, ஒரு திருமணத்தை நடத்தி வைக்க வேண்டுமேயானால், அவர் கஷ்டப்படாமல், கண்ணீர் மல்காமல் அந்தக் காரியத்தை நடத்த அவர்களுக்கு சம நிலை – தமிழகத்திலே மாத்திரமல்ல, குமரி முனையில் இருந்து இமயமலை வரையிலே உள்ள இந்திய பிரதேசத்தில், இந்திய மண்ணில் ஏற்பட்டாக வேண்டும்.

அந்தச் சமநிலை ஏற்பட முடியாமல் பணத்தை சுருட்டி வைத்திருப்பவன், கருப்பு பணம் வாங்குகின்றவன், கள்ள மார்க்கெட் நடத்துகின்றவன் இவர்களெல்லாம் குவித்து வைத்திருக்கின்ற பணம், அரசுக்கு செலுத்தாமல் வீட்டிலே ஒளித்து வைத்திருக்கின்ற பணம், புதைத்து வைத்திருக்கின்ற பணம், நான் சொன்ன கணக்கின் படி ஒரு லட்சத்து 17 ஆயிரம் கோடி ரூபாய். இந்த ஒரு லட்சத்து 17 ஆயிரம் கோடி ரூபாயை இந்திய அரசு கொஞ்சம் தீவிரமாக, கொஞ்சம் வேகமாக, விறுவிறுப்பாக, விரைவாக, தோண்டி எடுக்கிற, வெளியில் கொண்டு வருகின்ற அந்த முயற்சிகளை மேற்கொள்ளுமே யானால் இந்தியா மற்ற நாடுகளைப்போல குறைவான மக்கள் தொகை கொண்ட நாடு அல்ல, இது நூறு கோடியை இன்றைக்கு எட்டிக் கொண்டிருக்கிறது. கிரிக்கெட்டிலே கேள்விப்படுகிறோமே, பார்க்கிறோமே, செஞ்சுரி அடித்தார் டெண்டுல்கர், செஞ்சுரி அடித்தார் கங்குலி என்றெல்லாம் படிக்கிறோமே, கேள்விப்படுகிறோமே, இந்தியா மக்கள் தொகையில் இப்பொழுது செஞ்சுரி அடித்து அதையும் தாண்டி ரன் ஓடிக்கொண்டிருக்கிறது.

ஆகவே இவ்வளவு பெரிய நாட்டிலே உள்ள மக்கள், கோடிக்கணக்கான மக்கள் வாழ ஒரு லட்சத்து 17 ஆயிரம் கோடி முடங்கிக் கிடக்கிறதே அது வெளியிலே கொண்டு வரவேண்டும். அதையெல்லாம் முடக்கி விட்டு மக்களைப்பார்த்து நான்தான் புனிதன், புத்தன் நான்தான் மக்களுக்காக என்னை அர்ப்பணித்துக் கொண்டவன், நான் தான் சமதர்ம சஞ்சீவி, என்னால் எதுவும் முடியும், என்னை கொஞ்சம் ஆளவிட்டு பாருங்கள். நான் என்ன செய்கிறேன் பாருங்கள், என்றெல்லாம் கருப்புப் பணத்தை ஒளித்து வைத்திருப்பவர்கள் சொல்லிக் கொண்டிருக்கின்ற பித்தலாட்டக்காரர்கள் இன்றைக்கு நாட்டிலே தோன்றி இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் பாடம் போதிக்க ரத்தனவேலு தேவருக்கு இருந்த நெஞ்சுரம் உங்களுக்குத் தேவை,

தமிழ்நாட்டு மக்களுக்குத் தேவை, அந்த நெஞ்சுரத்தைப் பயன்படுத்தி போலிகளை அடையாளம் காணுங்கள், மக்களை ஏமாற்றுகின்ற மதோன்மத்தர்களை மக்களுக்கு காட்டிக் கொடுங்கள். நாடு வாழ, நலிவு தீர, இரத்தனவேலு தேவர் சிலைக்கு நேராக சபதம் எடுத்துக் கொள்ளுங்கள், சூளுரையுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்.

*****

மதுரை தியாகராசர் பொறியியல் கல்லூரி பொன்விழாவில் முதல்வர் கலைஞர் ஆற்றிய உரை

மதுரையில் 29.1.2007 அன்று நடைபெற்ற மதுரை தியாகராசர் பொறியியல் கல்லூரி விழாவில் முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு :–

தியாகராசர் பொறியியல் கல்லூரி பொன் விழா நிகழ்ச்சிக்கு தலைமையேற்றுள்ள, அதியமானைப் பாராட்ட வந்த அவ்வை பிராட்டியே, (பலத்த கைதட்டல்) வாழ்த்துரை வழங்கிய உயர் கல்வித் துறை அமைச்சர் தம்பி மாண்புமிகு டாக்டர் பொன்முடி அவர்களே, கவிப்பேரரசு வைரமுத்து அவர்களே, வரவேற்புரை யாற்றிய தம்பி கருமுத்து கண்ணன் அவர்களே, கல்லூரி அறிக்கையினைப் படித்து உரையாற்றிய டாக்டர் அபய் குமார் அவர்களே (கைதட்டல்) எவ்வளவு ஆதரவு இவருக்கு இருக்கிறது என்பது தெரிகிறது (சிரிப்பு) ஏனென்றால் பெயரே அபய குமாராக இருப்பதால் (கைதட்டல்) அபயம் அளிப்பார் என்ற முறையில் ஆனந்த சாகரத்தில் மூழ்குகிறீர்கள். எல்லோரும் சொல்லிவிட்டார்கள், நான் சொல்லாவிட்டால் கோபம் வரும், தயாளு அம்மாள் அவர்களே, (பலத்த சிரிப்பு) இன்று இந்த விழாவில் கலந்து கொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

இதை என்னுடைய பொன் விழா போலவே கருதி இந்தக் கல்லூரியின் விழாவில் களிப்பு மிகக் கொள்கிறேன். எப்படி என்னுடைய பொன் விழா போலக் கருதுகிறேன் என்றால் நேற்றையதினம் அருமை நண்பர் ஆற்காடு வீராசாமியும், தம்பி துரைமுருகனும், பொன்முடியும் எனக்கொரு பொன் விழா நடத்த

வேண்டுமென்று, என் பக்கத்திலே அமர்ந்து திட்டம் தீட்டிக் கொண்டிருந்தார்கள். என்ன பொன் விழா என்று கேட்டபோதுதான் 1957 ஆம் ஆண்டு முதன் முதலாக நீங்கள் குளித்தலையிலே வெற்றி பெற்று சட்டப் பேரவை உறுப்பினராக வந்தீர்கள். இதுவரையில் இடைவெளி இல்லாமல் சட்டமன்றத்தில் உறுப்பினராக தோல்வியே அடையாமல் இருக்கிறீர்கள், எனவே அதற்காக ஒரு பொன்விழா நடத்தப்போகிறோம் என்று சொன்னார்கள். எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது பாருங்கள், எனக்கும் பொன் விழா, நான் வந்து கலந்து கொள்கிற தியாகராசர் பொறியியல் கல்லூரிக்கும் பொன் விழா என்கிற போது இதைவிட பெரிய பொருத்தம் நான் இந்த விழாவிலே கலந்து கொள்வதிலே இருப்பதாக நான் கருதவில்லை.

ஏறத்தாழ ஒரு மாதக் காலத்திற்கு மேலாக நாள்தோறும், காலை, மாலை, இடைப்பட்ட நேரங்களில் பேசிப் பேசி, மருத்துவர்களின் ஆலோசனைகளைப் புறக்கணித்து தொடர்ந்து நிகழ்ச்சிகளிலே கலந்து கொண்ட காரணத்தால் என்னுடைய தொண்டை என்னோடு ஒத்துழைக்கவில்லை. "தொண்டை'' ஒத்துழைக்காத காரணத்தால் "தொண்டு'' நிற்கக் கூடாது என்று தொடர்ந்து கொண்டே தான் இருக்கின்றேன் என்னுடைய "தொண்டை'' (பலத்த கைதட்டல்).

அந்த வகையிலே தான் இன்று இந்த நிகழ்ச்சியை முடித்து விட்டு காலையிலே பரமக்குடியில் நடைபெறுகின்ற மக்கள் பிரச்சினை, மிக இன்றியமையாத பிரச்சினை, தண்ணீர் பிரச்சினை, அந்தப் பிரச்சினைக்காக ஒரு திட்டத்தைத் தொடங்கி வைத்து விட்டு, அங்கிருந்து புறப்பட்டு நிறைவேற்றப்பட்ட மக்கள் பிரச்சினை, நாகப்பட்டினத்தில், ஏற்கனவே இரண்டு

ஆண்டுகளுக்கு முன்பு வீசிய புயல், சூறாவளி, சுனாமி காரணமாக ஏற்பட்ட இழப்புகளை ஈடு செய்கின்ற வகையில், சுமார் 500 வீடுகளை அம்மையார் மாதா அமிர்தானந்த மயி அவர்கள் அங்கே கட்டி, அவைகளைத் திறந்து வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டதால், அதற்கும் பரமக்குடியிலிருந்து மானாமதுரை, சிவகங்கை, திருப்பத்தூர், புதுக்கோட்டை வழியாக தஞ்சை, திருவாரூர், நாகப்பட்டினம் சென்று அங்கே நடைபெறுகின்ற நிகழ்ச்சியிலும் கலந்து கொண்டு விட்டு பிறகு சென்னைக்குத் திரும்ப வேண்டும்.

இதற்கிடையே இவ்வளவும் சொல்லி, நான் நம்முடைய கருமுத்து கண்ணன் அவர்களிடம் இன்று நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு நான் பேசவே முடியாது, தம்பி வைரமுத்து வருகிறார், தம்பி பொன்முடி வருகிறார், அவர்களை வைத்துக் கொண்டு நீண்ட உரையாற்றச் செய்யுங்கள், நான் ஐந்தாறு நிமிடங்களில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று குறிப்பிட்டேன். அவர் தன்னுடைய தாயாருக்கு காட்டிய அந்த இரக்கத்தை என்னிடம் காட்டத் தயாராக இல்லை. (சிரிப்பு) தாயார் இந்தக் கல்லூரியை வழி நடத்திச் செல்பவர். அவரே மூன்று நிமிடத்தில் பேச்சை முடித்துவிட்டார். அதற்கு இணங்கிய தம்பி கருமுத்து கண்ணன், நான் ஐந்து நிமிடங்களிலே முடித்து விடுகிறேன் என்று சொன்னதைக் கேட்காமல், வாருங்கள், அங்கே எங்கள் மாணவர்கள் பத்தாயிரம் பேர் இருக்கிறார்கள், அவர்களைப் பார்த்தால் நீங்களே பேச்சை நிறுத்த மாட்டீர்கள் என்று சாதுர்யமாகச் சொல்லி என்னை அழைத்து வந்து விட்டார்.

அது எனக்குத் தெரியும். எப்படி இந்த ஐம்பதாண்டு காலம், அவருடைய அருமைத் தந்தையாரும், அவருடைய வழித்

தோன்றலாக தம்பி கண்ணனும் இந்தக் கல்லூரியை இவ்வளவு வெற்றிகரமாக நடத்தி வருகிறார்கள் என்பது எனக்கு இதிலிருந்தே தெரிகிறது. (கைதட்டல்) வள்ளுவர் வழி நின்று அவர்கள் இந்தக் கல்லூரியை நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். வள்ளுவர் ஒரு குறளிலே பொய் சொல்வது தவறல்ல, புரை தீர்ந்த நன்மை பயக்குமெனின், ஒரு நன்மையைச் செய்யுமேயானால், ஒரு காரியத்தில் பொய் கூடச் சொல்லலாம் என்று கூறிய திருவள்ளுவரின் வழிப்படி நடந்து, தம்பி கண்ணன் வாருங்கள், மாணவர்கள் எல்லாம் உங்கள் பேச்சைக் கேட்டு மேலும் உற்சாகமடைவார்கள் என்று சொன்னார்.

"குறள்'' எனக்கு ஆதரவாக இருந்தாலுங்கூட, "குரல்'' என்னோடு ஒத்துழைக்க மறுக்கிறது, (பலத்த கைதட்டல்) என்ன செய்வது? இருந்தாலும் நம்முடைய பேச்சாளர்கள் இங்கே ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக் கொண்டு, மாணவர்களே என்றால் கையொலி செய்தீர்கள், மாணவச் செல்வங்களே என்றார்கள், கையொலி செய்தீர்கள், நம்முடைய வைரமுத்து என் கண்ணைப் போன்ற மாணவர்களே என்றார், கையொலி செய்து வரவேற்றீர்கள் – நான் சொல்கிறேன், என் கண்ணினும் மேலான மாணவர்களே என்று உங்களை அழைக்கிறேன் (கைதட்டல்).

தமிழிலே மேலும் மேலும் உயர்த்த வார்த்தைகளா இல்லை, நிறைய இருக்கின்றன. இப்படி உயர்த்தி உயர்த்தித் தானே தமிழ்ச் சமுதாயத்தை பலபேர் ஏமாற்றியிருக்கிறார்கள். அவர்கள் எப்படி ஏமாற்றியிருக்கிறார்கள் என்பதற்காகத் தான் இந்த உவமைகளை எல்லாம், உதாரணங்களையெல்லாம் சொன்னேனே அல்லாமல், நாங்கள் ஏமாற்றுவதற்காக அல்ல.

இவர்கள் எல்லாம் பேசுவதை நீங்கள் கேட்டீர்கள். எதிர்காலத்தில் இந்த இளைஞர் சமுதாயம் ஏமாந்து விடக் கூடாது என்பதற்காகத்தான் இவ்வளவும் அவர்களும் சொன்னார்கள், நானும் சொல்ல விரும்புகிறேன்.

இந்தக் கல்லூரியை உருவாக்கியவர் கருமுத்து அவர்கள். நாங்கள் அவரை "கருமுத்து'' என்றுதான் அழைப்போம். தியாகராயச் செட்டியார் என்று அவருடைய முழுப் பெயரைச் சொல்லி அழைப்பது கூட அந்தக் காலத்திலேயே அவருடைய வயதுக்கு, அவருடைய அறிவுக்கு, அவருடைய அனுபவத்திற்கு, அவர் தமிழ் மீது கொண்டிருந்த பற்றுக்கு சரியல்ல என்று "கருமுத்து வந்தார், கருமுத்து சென்றார், கருமுத்து பேசினார்'' என்று தான் பேசிக் கொள்வோம்.

நானும் அவரும் பல நேரங்களிலே தமிழக அரசியலைப் பற்றி, தமிழ்ச் சமுதாயத்தைப் பற்றி அவருடைய இல்லத்திலும் அமர்ந்து பேசியிருக்கிறோம், குற்றாலத்தில் அவர் கட்டியிருக்கின்ற மாளிகையிலும் அமர்ந்து பேசியிருக்கிறோம்.

தமிழகத்தின் மொழிப் போராட்ட வரலாற்றில் அவருக்கு ஒரு முக்கியமான இடம் உண்டு என்று இங்கே சொன்னார் கள். அந்தக் குறிப்புகளில் ஒன்றிரண்டை மாத்திரம் என்னுடைய கைகளிலே நான் வைத்திருக்கிறேன். அவர் இந்தி ஆதிக்க எதிர்ப்பை எந்த அளவிற்கு வேகமாக கையாண்டார் என்பதை நான் நன்றாக அறிவேன். அவருடைய அகிம்சா குணத்தைப் பற்றி, அகிம்சா நெறியைப் பற்றி இங்கே பேசப்பட்டது. ஆனால் எனக்குத் தெரியும். அன்றைக்கு நடைபெற்ற மாணவர்கள் போராட்டத்தில், மாணவர்கள் நடத்திய மொழிப் புரட்சியில்

அவருடைய கை எந்த அளவிற்கு பின்னால் இருந்தது என்பது எனக்குத் தெரியும். ஏனென்றால் அது அப்படி இருக்க வேண்டு மென்று விரும்பியவர்களிலே நானும் ஒருவன், எனவேதான் அந்தக் கை அப்போது மொழிப் போராட்டத்தின் பின்னால் இருந்தது. அந்த மொழிப் புரட்சியிலே சிக்கியவர்கள், சீரழிந்தவர்களை யெல்லாம் காப்பாற்ற, இவர்களுக்கெல்லாம் கைக் கொடுக்க அன்றைக்கு முன் வந்த பெரியவர்களில் ஒருவர், தமிழ் ஆர்வலர்களிலே ஒருவர் கருமுத்து அவர்கள்.

தமிழ் ஏடுகள், தமிழிலே நடைபெற வேண்டும் என்ற உணர்வோடு, அந்த உந்துதலோடு அவர் நடத்திய நாளேடு தான் "தமிழ்நாடு." அந்த ஏட்டில் இங்கே நம்முடைய நண்பர்கள் எடுத்துக்காட்டியதைப் போல, அருமையான தமிழ்ச் சொற்களை, புடம்போட்டு எடுக்கப்பட்ட தனித் தமிழ் சொற்களையெல்லாம் கையாண்ட பெருமை கருமுத்து அவர்களுக்குத்தான் உண்டு என்று சொன்னால் அதை மறுப்பார் யாரும் இல்லை. அப்படி தமிழை வளர்த்தவர், தமிழுக்கு தீங்கொன்று வந்தால் துடித்தவர். அவரால் உருவாக்கப்பட்ட இந்தக் கல்லூரி ஐம்பதாவது ஆண்டு பொன் விழாவை கொண்டாடுகின்றபோது எனக்குப் பூரிப்பு பொங்கியெழுகிறது.

அவர் காங்கிரஸ் கட்சியின் மீதுகூட கோபம் கொண்டு காரியம் ஆற்றியதற்குக் காரணமே, மொழிப்பற்றுதான். தமிழ்மொழி மீது அவர் கொண்ட அளவற்ற பற்று, காதல் காரணத்தால் அவர் ஓரளவு ஈடுபாடு கொண்ட காங்கிரஸ் கட்சியின் தலைவர்களையெல்லாம் கூட பகைத்துக் கொள்ள அன்றைக்கு துடித்தார், காரணம் தன்னுடைய தாய்மொழிக்கு வந்த விபத்தை தடுக்க வேண்டுமென்பதுதான். அப்படிப் பட்டவர் 1946ஆம்

ஆண்டு, உத்தமர் காந்தியடிகளுக்கு எழுதிய கடிதம் ஒன்றை நான் படித்துக் காட்டினால் அவருடைய மொழி ஆர்வம், தமிழ் மொழி மீது அவர் கொண்டிருந்த காதல் எத்தகையது என்பதும், இந்தி ஆதிக்கத்தை எதிர்க்க அவர் கொண்ட துணிச்சல் எந்த அளவிற்கு இருந்தது என்பதையும் நீங்கள் புரிந்து கொள்ளக் கூடும். அந்தக் கடிதத்தில் சொல்லுகிறார் –

'1.2.1946 அன்று நீங்கள் மதுரையில் இருந்த போது நான் எழுதிய கடிதத்தில், "ராஷ்டிர பாஷா" என்பதற்குரிய விளக்கத்தை அளிக்குமாறு கோரியிருந்தேன். ஆனால் நீங்கள் இதுவரை அதற்கான விளக்கத்தினை நேரடியாகவோ, "ஹரிஜன்" பத்திரிகை மூலமாக மறைமுகமாகவோகூட தெரிவிக்கவில்லை. இதற்குப் பதிலளிக்கமுடியாது என எனது அறிவார்ந்த நண்பரும், புகழ்பெற்ற சென்னைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தருமான டாக்டர் சர் லட்சுமணசாமி முதலியார் கூறுகிறார்' என்று காந்தி அடிகளுக்கு எழுதிய கடிதத்தில் கருமுத்து அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்.

அது மாத்திரமல்ல, மேலும் அந்தக் கடிதத்தில்,

'As stated in my last letter, if you want Hindustani to be the Lingua Franca or the common language of India or even the Court language of the Central Government, there may be no objection. But if you want to force it as the State or Court and official language of all the provinces there will be bloodshed, as no one will offer his mother tongue-his richest inheritance – as a victim on the alter of Hindustani'.

('எனது முந்தைய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தபடி, இந்துஸ்தானியை நீங்கள் இந்தியாவின் பொதுமொழியாக, மையஅரசின் நீதிமன்ற மொழியாக்க விரும்பினால் அது குறித்து எங்களுக்கு எந்தவிதமான ஆட்சேபணையுமில்லை. (இது அந்தக் காலத்தில் அவருடைய கருத்து) ஆனால், நீங்கள் அனைத்து மாநிலங்களிலும் ஆட்சி மொழியாகவோ, நீதிமன்ற மொழியாகவோ இந்துஸ்தானியைத் திணிக்க முயற்சி செய்தால், வளமிக்க பாரம்பரியத்தைக் கொண்டுள்ள தங்கள் தாய்மொழியை இந்துஸ்தானிக்காகப் பலிகொடுக்க விரும்பாமல் ஒவ்வொருவரும் இரத்தம் சிந்த முன்வரும் நிலை உருவாகும்') (பலத்த கைதட்டல்) – என்று எழுதினார்.

இது இந்தி ஆதிக்கத்தை அவர் எதிர்த்த போது கருமுத்து அவர்கள் கொண்டிருந்த வீரம், தீரம், உறுதி உண்மையிலேயே அவர் தமிழ் மீது கொண்டிருந்த பற்று. வேடிக்கைக்காக, வேஷத்திற்காக அவர் தன்னை தமிழர் என்றோ, தமிழ்ப் பற்றாளர் என்றோ, தமிழ் ஆர்வலர் என்றோ, தமிழ்த் தாயின் திருமகன் என்றோ, தமிழ்த் தாயின் மானத்தைக் காக்க, தமிழ்த் தாயின் உரிமையைக் காக்க தடந்தோள் தட்டுபவர் என்றோ கூறிக் கொண்டவரல்ல. அவர் உதிரத்திலே ஓடியது உண்மையான தமிழ் ரத்தம்.

அந்த தமிழ் ரத்தத்தின் சாட்சியாக, இன்னும் சொல்லப் போனால், அந்த ரத்தத்தையே மையாகத் தொட்டு, அன்றைக்கு கருமுத்து அவர்கள் மகாத்மா காந்திக்கு இப்படிப்பட்ட ஒரு கடிதத்தை எழுதினார் என்றால், நாம் எவ்வளவு பெரிய போராளியை, தமிழ்ப் போராளியை இழந்திருக்கிறோம் இன்றைக்கும் நினைத்துப் பார்த்து வேதனைப்பட நிலைமையிலே

உள்ளோம். அப்படிப்பட்ட பெரியவர் உருவாக்கிய அந்தக் கடிதம் தந்த உணர்வு தான் இன்றளவும் இந்தியாவிலே குறிப்பாக தமிழகத்திலே இந்தி ஆதிக்கத்திற்கு இடமில்லாத ஒரு நிலை.

இந்தி ஆதிக்கத்திற்கு இடமில்லாத நிலை என்று சொல்லும் போது இப்பொழுது உருவாகியிருக்கின்ற இந்த ஆட்சி, நண்பர்கள் எடுத்துக் காட்டியதைப் போல தமிழினுடைய சிறப்பை, தமிழினுனுடய பெருமையை நிலை நாட்டுவதற்கு எடுத்துக் கொண்ட முயற்சிகள் எவ்வளவு வெற்றியினைப் பெற்றிருக்கிறது என்பதையெல்லாம் நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

நூறாண்டுகளுக்கு முன்பு சூரியநாராயண சாஸ்திரி என்ற பெயர் கொண்டவர், பரிதிமாற் கலைஞர் என்று தன்னுடைய பெயரை தனித்தமிழிலே மாற்றிக் கொண்ட பெருமகன் இந்த மதுரை மாவட்டத்திலே தான் ஒரு சின்னஞ்சிறு கிராமத்திலே பிறந்தவர். அவருக்குக்கூட நினைவுச் சின்னம் எழுப்ப அந்த வீட்டையே நினைவு மண்டபமாக ஆக்க இன்றைய அரசு முயற்சி மேற்கொண்டிருக்கின்றது. (கைதட்டல்) அந்தப் பரிதிமாற்கலைஞர் முதல் குரல் கொடுத்தார். தமிழ் செம்மொழி – உலகத்திலே ஐந்தாறு மொழிகளை செம்மொழி என்று ஆக்கியிருக்கிறீர்கள், அதில் சமஸ்கிருதமும் ஒன்று என்று சொல்கிறீர்கள், அதோடு தமிழையும் இணைக்க வேண்டும் என்று முதல் குரல் கொடுத்தார் சூரியநாராயண சாஸ்திரி.

நாங்கள் ஏதோ ஒரு இனத்துக்கு விரோதி என்கிறார்களே, அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும், நான் அழுத்தந் திருத்தமாக பரிதிமாற்கலைஞர் என்பதை விட சூர்யநாராயண சாஸ்திரி என்ற பெயரைச் சொல்கிறேன். எதற்காகச் சொல்கிறேன் என்பதை

புரிந்து கொள்ள வேண்டும். யார் தமிழுக்காகப் பாடுபட்டாலும், அவர்களுக்கு தலை வணங்கிட இந்த இயக்கத்திலே உள்ள நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதற்கு அடையாளமாகத் தான் இதைச் சொல்லுகின்றேன். (பலத்த கைதட்டல்) அவர் அன்று பட்டபாடு, எடுத்த முயற்சி நூறாண்டு காலமாக நிறைவேறாமல் இருந்து நம்முடைய கருமுத்து போன்றவர்கள் இணைந்து நடத்திய போராட்டம், பெரியார், பேரறிஞர் அண்ணா மற்றும் மாணவச் செல்வங்கள் இவர்கள் எல்லாம் ஈடுபட்டு நடத்திய போராட்டம், அதன் விளைவாக உருவான ஆட்சி, அறிஞர் அண்ணா தலைமையில் திராவிட முன்னேற்றக் கழகம் தலைமையிலே அமைந்த ஆட்சி. அந்த ஆட்சியின் விரிவாக அண்ணாவிற்குப் பிறகு நாங்கள் அந்தப் பொறுப்பையேற்றுள்ள இந்தச் சூழ்நிலையில் டெல்லியிலே ஒரு நல்ல அரசு அமைந்துள்ளது.

அந்த அரசு திருமதி சோனியா காந்தி அவர்களின் வழிகாட்டுதலோடு அமைந்துள்ள ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு. அந்த அரசுக்கு நாங்கள் வைத்த வேண்டுகோள் சூரியநாராயண சாஸ்திரி அன்றைக்குக் கண்ட கனவை நிறைவேற்றுங்கள், தமிழுக்கு செம்மொழி என்ற தகுதியைத் தாருங்கள், உலகத்தில் ஐந்தாறு மொழிகள், இப்ரூ, உருது போன்ற ஐந்தாறு மொழிகள் தான் செம்மொழிகளாக இருக்கின்றன, அந்தப் பட்டியலில் எங்கள் தமிழையும் சேர்க்க வேண்டுமென்று, அதற்குரிய தகுதி அத்தனையையும் எடுத்துச் சொன்னோம். டாக்டர் மன்மோகன்சிங் அவர்களிடத்திலே எடுத்துச் சொன்னேன், சோனியாகாந்தி அவர்களிடம் எடுத்துச் சொன்னேன்.

சோனியா காந்தி அவர்கள் இன்றைய இந்தியாவை ஆளுகின்ற அரசுக்கு வழி காட்டுகின்ற அம்மையார் என்பது உங்களுக்குத் தெரியும். அவர்கள் – ஒரு பெண்ணால், ஒரு நல்ல பெண்ணால் நாட்டைக் காப்பாற்ற முடியும், நாட்டை முன்னேற்ற முடியும் என்பதற்கு அடையாளமாகத் திகழ்பவர்கள், சோனியா காந்தி அவர்கள் – வீரப் பெண்மணியும் கூட – துணிவான பெண்மணியும் கூட. துணிச்சல் என்றால் அசட்டுத் துணிச்சல் அல்ல, அறவழித் துணிச்சல். அப்படிப்பட்ட துணிச்சல் கொண்ட பெண்மணி, இந்திரா காந்தியின் மருமகள் சோனியா காந்தி அவர்கள் நம்முடைய வேண்டுகோளையேற்று "செம்மொழி" என்ற அந்தக் கோரிக்கையை நிறைவேற்றித் தந்தார்கள். அது மாத்திரமல்ல, அதைப் பற்றி விவாதிக்கின்ற கூடமாக, மைசூரிலே ஒரு குழு இருந்தது. நான் திரு. அர்ஜுன் சிங்கைப் பார்த்து, கல்வி அமைச்சர் என்ற முறையில் அவரை டெல்லியில் பார்த்து, இந்தச் செம்மொழிக்கான நிறுவனம் மைசூரிலே இருக்கின்ற காரணத்தால் எங்களுக்கு எட்டாத தொலைவு, எனவே தமிழகத்திலே சென்னை நகரத்திலே இந்த மையம் அமைய வேண்டும், அதற்கான குழு அமைக்கப்பட வேண்டுமென்று கேட்டு, அவரும் இதற்கிணங்கி செம்மொழியை செம்மைப் படுத்துகின்ற அந்தக் குழு தற்போது சென்னையிலேயே அமைக்கப்பட்டுவிட்டது என்ற நல்ல செய்தியையும் நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

அந்த நல்ல செய்தியைச் சொல்கிற அதே நேரத்தில் நம்முடைய பாராட்டுகள், நன்றி, நம்முடைய வாழ்த்து எல்லாம் திருமதி சோனியா காந்தி அவர்களைச் சேர வேண்டும். ஏனென்றால் அவர்கள்தான் தமிழ் செம்மொழியாக ஆக்கப்பட்ட பிறகு எனக்கு எழுதிய ஒரு கடிதத்தில், குறிப்பிட்டே எழுதினார்கள்.

தமிழ் செம்மொழி ஆனதற்கு பெருமைப் பட்டுக் கொள்ள வேண்டுமேயானால், அந்தத் தகுதி உங்கள் ஒருவருக்குத் தான் உண்டு (கைதட்டல்) என்று எனக்கு சோனியா காந்தி அவர்கள் ஒரு கடிதம் எழுதினார்கள்.

நான் அந்த அம்மையார் நீண்ட நாள் வாழ வேண்டும் என்ற ஆர்வம் உடையவன். இங்கே நம்முடைய அம்மையார் ராதா தியாகராசன் அவர்கள் பேசும்போது, அவ்வையார் என்று குறிப்பிட்டேனே, அவரே என்னை வாழ்த்தி, நான் நூறாண்டு வாழ வேண்டுமென்று சொன்னார்கள். நான் ஏற்கனவே 20 ஆண்டுகளுக்கு உத்தரவாதம் அளித்திருக்கிறேன். தம்பி வைரமுத்து சொன்னதைப் போல – அது போதும். அதற்கு மேல் நான் கஷ்டப்படவும் விரும்பவில்லை, அதற்கு மேல் என்னுடைய தொண்டும் தேவைப்படாது, எனக்குப் பிறகு வருகின்றவர்கள் என்னைப் போல நிச்சயமாகப் பணியாற்றுவார்கள், போர்க்குணம் படைத்தவர்களாக இருப்பார்கள், தமிழரை – தமிழைக் காப்பாற்றுவார்கள் என்று எனக்குத் தெரியும்.

ஆனால் ஒரு பெண்ணுக்கு, ஒரு நாட்டை வழி நடத்துபவருக்கு இருக்கின்ற வீரத்தை, துணிவை, ஆற்றலை உங்களுக்குச் சொல்ல வேண்டும். அண்மையில் சோனியா காந்தி அவர்களின் பாதுகாப்பைப் பற்றி டெல்லியில் பரபரப்பாகப் பேசப்பட்டது. இங்கே மாணவிகள் அதிகமாக இருக்கின்ற காரணத்தால் சோனியா காந்தி அவர்களைப் பற்றிக் குறிப்பிடுவது பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன். ஆளுகின்ற இடத்திலே இருக்கின்ற மற்ற பெண்களைக் குறிப்பிடுவதை விட ஆளுகின்ற இடத்திலே

இல்லாவிட்டாலும், ஆலோசனை சொல்லுகின்ற இடத்திலே இருந்து வழி நடத்துகின்ற ஒரு பெண்மணியைப் பற்றி குறிப்பிடுவது, அதுவும் தனக்கு வந்த பிரதமர் பதவியையே வேண்டாமென்று என் முன்னிலையிலேயே, என்னிடத்திலே பேசிவிட்டு சென்ற அரை மணி நேரத்திலேயே அறிவித்தார்களே, அந்த அம்மையாரைப் பற்றி. பேசுவது நாட்டை, நாட்டு மக்களை பதவியை விட அதிகமாக நேசிக்க வேண்டுமென்ற அந்தப் பெருங்குணத்தைக் காட்டுகின்ற ஒன்று என்பதற்காக நான் இந்த நல்ல விழாவிலே அதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

நான் அவர்களுக்கு எழுதியிருந்தேன். மிக மோசமான அளவிற்கு பாதுகாப்பு பிரச்சினை டெல்லி பட்டினத்தில் ஏற்பட்டிருப்பதாக செய்திகள் வருகின்றன. ஆகவே தாங்கள் இதை அலட்சியமாகக் கருதாமல் அதிகப் பாதுகாப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும், நீங்கள் இதிலே "Risk" (ரிஸ்க்) எடுக்கக் கூடாது, பாதுகாப்பு பிரச்சினை அலட்சியப்படுத்தக் கூடியதல்ல என்று அவர்களுக்கு எழுதியிருந்தேன். அதற்கு அவர் எனக்கு எழுதிய பதில் தகுந்த நேரத்திலே கிடைத்தது,

ஆகவே அதை நான் உங்களுக்குப் படித்துக் காட்ட விரும்புகிறேன். அவர்கள் யார் என்பதை இந்தக் கடிதம் உங்களுக்கு உணர்த்தும். கருணாநிதியைப் போல வாழுங்கள் என்று மாணவர்களுக்கு நம்முடைய பொன்முடி சொன்னார். மாணவர்களுக்கு அவர் சொன்னார், நான் சோனியா காந்தியைப் போல இருங்கள் என்று மாணவிகளுக்குச் சொல்வதற்காக இதைப் படித்துக் காட்டுகிறேன்.

Dear Thiru Karunanidhi ji,

Thank you for your letter, expressing concern for my security. I am deeply touched by the sentiments you have expressed.

In matters of security, I share your view that one must not take unnecessary risks, but at the same time one cannot live in fear! (ரிஸ்க் எடுக்கக் கூடாது, அதே நேரத்தில் ஒருவர் பயந்து கொண்டே வாழக் கூடாது என்று அம்மையார் எழுதிய வாசகத்தைத் தான் கோடிட்டுக் காட்டுகிறேன்) As always, I value your goodwill, support and advice.

With warm regards,

Yours sincerely,
Sonia Gandhi.

இப்படியொரு கடிதம் எழுதிய அந்தப் பெண்மணியின் தியாகத்தை வீரத்தை, தீரத்தை, நாட்டின் மீது அவர்கள் கொண்டிருக்கின்ற அக்கறையை எண்ணிப் பார்த்தால் மாத்திரம் போதாது, அவர்களின் வழியைப் பின்பற்றவும் நாம் நம்மைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும் என்று நான் கூறி, பொன்முடி சொன்னதை மாணவர்களுக்கும், இந்தக் கடிதத்திலே இருக்கின்ற வாசகங்களை மாணவிகளுக்கும் நினைவுபடுத்தி இந்த அருமையான விழாவில் என்னை கலந்து கொள்ள கருமுத்து கண்ணன் அவர்கள் கட்டளை யிட்டதற்காகவும், என்னை வாழ்த்தியதற்காக திருமதி ராதா தியாகராசன் அம்மையாருக்கும் அன்பான நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்.

****



